பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

தரமானதே சிறந்தது என்றால்



சொலிட் பம்பையே வாங்குங்கள்

# உதயன்

விலை ரூபா 3/50

When only The best is Good Enough



Buy Solide Pumps

சுடர்: 5 சுக்கில ஸூ மாசி மீ 21 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1410 ஸபர் பிறை 07 (05 - 03 - 1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 25

# அமைதி, சமாதானம் நிலவ புலிகளை ஆதரியுங்கள்!

## மட்டுநகர் பொதுக் கூட்டத்தில் மாத்தயா விடுத்த வேண்டுகோள்

— மட்டக்களப்புச் செய்தியாளர் இரா. உதயகுமார் —

மட்டக்களப்பு, மார்ச் 5

"ஈழ மண்ணில் அமைதி, சமாதானம் நிலவ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு தாருங்கள்".

நேற்று மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் நடைபெற்ற விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில் முன்னணியின் தலைவர் திரு. கோபாலசாமி மகேந்திரராஜா (மாத்தயா) இப்படிக் கோரிக்கை விடுத்தார்.

முன்னணியின் பிரதித்தலைவர் திரு. எஸ். கரிகாலன் பொதுக் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

சுமார் பத்தாயிரத்துக்கும் அதிகமானவர்கள் வெபர் மைதானத்தில் கூடியிருந்தனர். கூட்டத்தில் பெரும் எண்ணிக்கையான பெண்களும் காணப்பட்டனர்.

மட்டக்களப்பு நகரமும் கூட்டம் நடந்த மைதானமும் மஞ்சள், சிவப்பு நிறக் கொடிகளாலும் விடுதலைப் புலிகளின் கொடிகளாலும் அலங்கரிக்கப்பட்டு இருந்தன.

வீதிகளின் குறுக்கே பதாகைகளும் கட்டப்பட்டு இருந்தன. அந்தப் பதாகைகளில் "அரசியல் வித்தகர்களே வருக!, வருக!!", "விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணித் தலைவர்களே வருக!, வருக!!" என்ற வாசகங்கள் காணப்பட்டன.

திரு. மாத்தயா தமது பேச்சில் மேலும் கூறியதாவது:-

40 வருட கால எமது அர

(5ஆம் பக்கம் பார்க்க)

## இரு வாரங்களில் முக்கிய திருப்பம்

### பாலசிங்கம் தகவல்

மட்டக்களப்பு, மார்ச் 5

இரு வாரங்களில் முக்கிய திருப்பம் ஒன்று ஏற்படும் என்று நேற்று மட்டக்களப்பில் நடைபெற்ற விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் மாபெரும் கூட்டத்தில் உரையாற்றுகையில் டாக்டர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

திரு. பாலசிங்கம் கலந்து கொண்ட முதலாவது பகிரங்க பொதுக் கூட்டம் இதுவாகும்.

திரு. பாலசிங்கம் தமது உரையில் மேலும் கூறியதாவது:

ஒரு வருடத்திற்கு முன் தமிழீழத்தில் நிலவிய சூழ்நிலை மக்களுக்குத் தெரியும். ஒரு லட்சம் இந்தியப்படையினர் இந்த மண்ணை முற்றுகையிட்டு விடுதலைப் புலிகளு

(5ஆம் பக்கம் பார்க்க)

## திருமதி பாலசிங்கமும் பொதுக்கூட்டத்தில் பேசினார்

நேற்று மட்டக்களப்பில் நடைபெற்ற விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் பொதுக்கூட்டத்தில் டாக்டர் அன்ரன் பாலசிங்கத்தின் பாரியார் திருமதி அலட்ரா பாலசிங்கமும் உரையாற்றினார்.

பிரிட்டிஷ்வாசியான திருமதி பாலசிங்கம் சுமார் 15 நிமிடங்கள் ஆங்கிலத்தில் பேசினார்.

அவரது உரையை கவிஞர் காசி ஆனந்தன் தமிழில் மொழி பெயர்த்தார்.

திருமதி பாலசிங்கம் தமது உரையில் விடுதலைப்போராட்டம், விடுதலைப் போராட்டத்தில் பெண்கள் பங்கு ஆகியவைபற்றிக் குறிப்பிட்டார்.

(உ-21)

## புலிகளின் வேண்டுதலின் பேரில் பொலீஸார் விலகிச் சென்றனர்

மட்டக்களப்பு, மார்ச் 5

மட்டக்களப்பில் நேற்று விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் பொதுக் கூட்டம் நடைபெறுவதற்கு முன்னர் காலையில் ஸ்ரீலங்காப் பொலீஸார் நகரின் கேந்திர நிலையங்களில் காவலில் ஈடுபட்டிருந்தனர்.

அதை அடுத்து விடுதலைப் புலிகள் பொலீஸாரைக் கேட்டுக் கொட்டதன் பேரில் அவர்கள் காவல் கடமையை கைவிட்டு, பொலீஸ் நிலையம் சென்றடைந்தனர்.

கூட்ட மைதானத்திலும், நகரின் ஏனைய பகுதிகளிலும் நேற்று விடுதலைப் புலிகளே முழுப் பாதுகாப்புக்கும் பொறுப்பாக இருந்தனர்.

(ஒ-21)

## ஈழத் தமிழர் பிரச்சினை; இ.காங்.தீர்மானம்நிறைவேற்றம்

### நேற்று ராஜீவ் தலைமையில்

புதுடில்லி, மார்ச் 5

இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து புதுடில்லியில் நேற்று நடந்த இந்திராகாங்கிரஸ் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

தீர்மானம் வருமாறு:

இலங்கை — இந்திய ஒப்பந்தத்தைக் கவனத்தோடு பற்றியிருக்குமாறு மத்திய அரசை காங்கிரஸ் கட்சி கோருகிறது

இலங்கை வடக்கு— கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் மக்கள் அளித்த தீர்ப்பை மதித்து மாகாண முதலமைச்சருக்கு அதிகார வலு கொடுக்க வேண்டும்.

இலங்கை பிளவுபடுவதைத் தடுக்க வடக்கு — கிழக்கு மாகாணசபைக்கு அதிகாரப் பங்கீடு வழங்குவதே ஒரே வழியாக இருக்கும், என்று அத்தீர்மானத்தில் கூறப்பட்டிருக்கிறது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கட்சித் தலைவர் என்ற முறையில் கூட்டத்திற்கு தலைமை வகித்தார்

(ஒ எ)

### சுப நேரம்

5. 3. 1990

திங்கட் கிழமை மாசி 21

சுப நேரம்:

12. 26முதல் 1. 56 வரை

ராகுகாலம்:

7. 56முதல் 9.26 வரை

நவமி

இவை இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்

## கடற்படை ஷெல் வீச்சு! நாரந்தனையில் வீடு சேதம்!!

காரைநகர் கடற்பகுதியில் இருந்து ஏவப்பட்ட ஷெல் நாரந்தனையில் வீடு ஒன்றின் மீது விழுந்தது. இதனால் வீடு சேதமடைந்தது. வீட்டில் இருந்தவர்கள் தெய்வாதீனமாக உயிர் தப்பினர்.

இந்த ஷெல் காரைநகர் கடற்படை முகாம் பீரங்கிப் படகில் இருந்து கடந்த சனிக்கிழமை இரவு ஏவப்பட்டதாகச் சொல்லப்பட்டது.

கிராம சேவையாளர் திரு. கே. சகாதேவன் என்பவரின் வீடே சேதமடைந்தது. ஷெல் விழுந்த இடத்துக்கு மிகச் சமீபமாக கிராமசேவையாளரின் குழந்தை ஒன்று நித்திரையில் இருந்தது. எனினும் குழந்தை காயம் ஏதுமின்றி மயிரிழையில் தப்பிவிட்டது.

விழுந்த செல்லின் ஒரு பகுதி தீவுப்பகுதி விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டது.

### முச்சந்தி முரளி



கறள் பிடிச்ச ஷெல் குழாயளை துப்பரவு செய்து ஒத்திகை பாக்கினமோ ......?

### முதல்வர்கள் பதவியேற்பு

மகராஷ்டிர மாநிலத்தில் இந்திரா காங்கிரஸ் முதலமைச்சராக திரு. சரத்பவாரும் குஜராத்தில் ஜனதா தள முதலமைச்சராக திரு. சின்பாய் படேலும் நேற்று பதவி ஏற்றனர்.

பாண்டிச்சேரியில் திரு. டி இராமச்சந்திரன் தலைமையிலான தி. மு. க. - ஜனதா தள் அமைச்சரவை வருகிற வியாழன் பதவி ஏற்க உள்ளது.

# மாகாணசபை நிர்வாகமும் ஸ்தம்பிக்கும்?

கொழும்பு, மார்ச் 5

வடக்கு, கிழக்கு மாகாண சபை குறித்து இழுபறி நிலை ஏற்பட்டிருக்கும் இவ்வேளையில் மாகாண சபை நிர்வாகமும் ஸ்தம்பிக்கும் நிலை ஏற்பட்டிருப்பதாக திருகோணமலையிலிருந்துகிடைக்கும் செய்திகள் தெரிவித்தன.

சுதந்திர ஈழ ஜனநாயகக் குடியரசின் தேசிய அரசுப் பேரவையாக, வடக்கு கிழக்கு மாகாண சபை தன்னைப் பிரகடனப்படுத்தியிருப்பதை அடுத்து அச்சபையின் எதிர்காலம் கேள்விக் குறியாக இருக்கிறது.

இவ் வேளையில் மாகாண சபை நிர்வாகமும் செயல் இழக்கும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

மாகாண அமைச்சின் செயலாளர்கள் பலர் திருகோணமலையை விட்டு வெளியேறி கொழும்பிலும், வெளிநாடுகளிலும், பிற இடங்களிலும் தங்கியிருப்பதாகக் கூறப்படுகிறது.

தமது எதிர்காலம் குறித்து நிச்சயமற்ற நிலை நிலவுவதால் சபையின், உயரதிகாரிகள் பலரும் திருமலையை விட்டு வெளியேறியுள்ளனர்

(5ஆம் பக்கம்— பார்க்க)

## வடக்கு, கிழக்கு மாகாணசபை எவ்வேளையிலும் கலைபடலாம்!

### அரச உயர் வட்டாரங்கள் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 5

வடக்கு - கிழக்கு மாகாண சபை கலைப்புப் பற்றிய பிரகடனத்தை ஜனாதிபதி எந்தச் சமயத்திலும் வெளியிடலாம் என்று கொழும்பில் அரசு உயர் வட்டாரங்கள் தெரிவித்தன.

வடக்கு – கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு. அ. வரதராஜப்பெருமாளின் "தமிழீழப் பிரகடனம்" அரசமைப்புக்கு முரணானது. இது அரசமைப்புச் சட்டத்தின் 154 (L) ஷரத்தின் கீழ் மாகாண சபையைக் கலைக்கும் அதிகாரத்தை ஜனாதிபதிக்கு வழங்குகின்றது என்று சட்ட நிபுணர்கள் ஜனாதிபதிக்கு ஆலோசனை கூறியுள்ளனர்.

மாகாணசபை சீர்குலைந்து

(5ஆம் பக்கம் பார்க்க)

## தேசிய தலைவர் பதவியை சிங் துறந்தார்!

புதுடில்லி, மார்ச் 5

இந்தியப் பிரதமர் திரு. வி. பி.சிங் ஜனதா தள் கட்சியின் தேசியத் தலைவர் பதவியை ராஜினாமாச் செய்துவிட்டார்.

இரண்டு பதவிகளையும் ஒருவர் வகிக்கக்கூடாது என்ற கொள்கை காரணமாகவே பிரதமர் பதவியை வைத்துக் கொண்டு கட்சியின் தேசியத் தலைவர் பதவியை திரு. சிங் ராஜினாமாச் செய்தார்என்று அவருடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஒ-எ)

## சுதந்திரப் பிரகடனம் ஓர் எச்சரிக்கையாம்

### யோகசங்கரி எம். பி. சொல்கிறார்

கொழும்பு, மார்ச் 5

தமிழரின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண இலங்கை அரசுகளுக்கு தொடர்ச்சியாக 42 ஆண்டுகளாக அவகாசம் கொடுக்கப்பட்டு வந்தது.

இந்த நெருக்கடியின் பாரதூரம் பற்றி உணர்ந்து கொள்ள கொடுக்கப்பட்ட எச்சரிக்கைதான் இந்த சுதந்திரப்பிரகடனம்.

தமிழீழ சுதந்திரப் பிரகடனம் பற்றி ஈ. பி. ஆர். எல்.

(5 ஆம் பக்கம் பார்க்க)

## ★ யாழ். பாடசாலைகள் இரு நேரமாக இயங்கும் திட்டம் இன்று நடைமுறைக்கு வராது

யாழ்ப்பாணம், மார்ச் 5

யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகளை இரு நேரமாக்கும் திட்டம் இன்று திங்கள் முதல் அமுலுக்கு வரும் என்ற செய்தியில் எந்தவித உண்மையும் இல்லை,

இப்படி கல்வித் திணைக்கள உயரதிகாரியான பதில் பிரதிப் பணிப்பாளர் திரு. தங்கராசா நேற்று மாலை உதயனுக்கு தெரிவித்தார்.

இன்று திங்கட்கிழமைமுதல் யாழ். மாவட்டப் பாடசாலைகள் இரு நேரமாக இயங்கும் என்று வெளிவந்த செய்தி குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இரு நேரமாக்கும் திட்டம் உள்ளது. ஆனால் எப்போது இருந்து நடைமுறைக்கு வரும் என்பது பற்றி இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

அத்துடன் இதுசம்பந்தமாக எந்தவொரு சுற்று நிருபமும் பாடசாலைகளுக்கு அனுப்பப்படவில்லை,

இப்படி அவர் கூறினார்.

(இ-69-3)

சேவ்ரி ரவல்ஸ்

யாழ் - கொழும்பு - யாழ்

பஸ் சேவை

நீண்டகால இடைவேளைக்குப் பின்பு
மீண்டும் இன்று முதல் ஆரம்பம்
எமது தினசரி சேவை
இன்று முதல் மாலை இரட்ணம் பார்மசி முன்பாக ஆரம்பமாகும் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

சேவ்ரி ரவல்ஸ் ஸ்தாபனம்
102, 3-ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

(11955)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தேவை

சைக்கிள் திருத்துவதில் அனுபவமுள்ளஒருவர்தேவை-திறமைக்கேற்ற சம்பளம் வழங்கப்படும். விண்ணப்பிக்க வேண்டிய முகவரி; சு. மயில் வாகனம், 30/13 மூத்தவினாயகர் வீதி, நல்லூர்.
(11900)

புரியாணி தயாரிப்பதில் அனுபவம் உள்ளவர்களுடன் ரீ மேக்கர் வேலை தெரிந்தவர்களும், வெயிட்டர் வேலை செய்யக்கூடியவர்களும், கடையில் தங்கி காசாளர் வேலை செய்யக்கூடியவர்களும் தேவை. நேரில் வரவும். றிக்கோ ஹோட்டல், 370, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (2811)

பிரபலமான வியாபார ஸ்தாபனம் ஒன்றிற்கு விற்பனையாளர்களாக கடமையாற்றுவதற்கு பெண் பிள்ளைகள் தேவை. அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். நேரில் வரவும். 61, மணிக்கூட்டு வீதி [வெலிங்டன் சந்திக்கு அருகாமையில்] யாழ்ப்பாணம்.
(11945)

புதிதாக ஆரம்பிக்க இருக்கும் கிறீம்ஹவுஸ் ஸ்தாபனத்திற்கு அனுபமுள்ள சமையல் ஆள், ரீமேக்கர், வெயிற்றர், சமையல் உதவி ஆட்கள் தேவை. 10-3 1990 காலை 10-00 மணிதொடக்கம் 4 மணி வரை நேரில் வரவும். ''டாட்டா கிறீம் ஹவுஸ்'' No. 76, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் (ரஜீஸ்ரோஸ் முன்பாக) (2807)

### மணமகள் தேவை

யாழ் இந்து உயர் வேளாள குலத்தைச் சேர்ந்த 31 வயது உடையவரும், கனடா பிரசையும், இலங்கையில் B. Sc. தகுதியுடைய கனடாவில் மின்னியல், இரசாயனவியல் சிரேஷ்ட தொழினுட்ப வியாலாளர் பட்டம் பெற்று தொழில் புரிபவருக்கு C.I.M.A. தகுதியுடைய 30 வயதுக்கு உட்பட்ட வரை பெற்றோர் எதிர்பார்க்கின்றார்கள் Bio. Data குறிப்புடன் தொடர்பு கொள்ளவும். No. 631 C/o உதயன்.
(2805)

### மணமகள் தேவை

யாழ். இந்து வேளாள 28வயதுடைய U. S. A. எஞ்சினியருக்கு டாக்டர் பெண் தேவை. 30வயதுடைய U.K.எக்கவுண்டனுக்கு B.sc. பட்டதாரி எக்கவுண்டன் பெண்தேவை. இருசாதகங்களும். செவ்வாய்க்குற்றம் அற்றவை. தொடர்பு 328, நாவலர்றோட் ஆனைப்பந்தி
(11953)

### பாமசி வகுப்புக்கள்

இலங்கை மருத்துவ கல்லூரியால் நடாத்தப்படும் பாமசி பரீட்சைக்கு தோற்ற விரும்பவர்களுக்கான ஆரம்ப-மீட்டல் வகுப்புக்கள் தகுதி வாய்ந்த ஆசிரியர்களால் ஆரம்பிக்கப்படவுள்ளது தகுதிக.பொ.த.(சாதாரண) பரீட்சையில் சித்தி. மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்க. நெர்தேன் பாமசி, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (2809)

### வாங்கலாம் விற்கலாம்

பழைய புத்தகங்கள் வாங்கப்படும், விற்கப்படும். அனுபவமுள்ள புத்தகம் கட்டுபவர் Binder நேரில் வரவும். Second Hand Book House, (முரசொலிக்கு முன்லேன்) 13/6 ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். (2808)

### தவறிவிட்டது

676852832 V இலக்கமுள்ள அடையாள அட்டை தவறிவிட்டது. கிடைத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்திலோ அன்றி 321, நாவலர் வீதி யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தந்துதவுமாறு கேட்டுக் கொள்கிறேன். S. வெண்ணிலா.
(11898)

### கோழிக்குஞ்சு விநியோகம்

Hyline வெள்ளை' சிவப்பு, கறுப்பு பேட்டுக்குஞ்சுகள், Golden Comet பிறவுண் பேட்டுக்குஞ்சுகள், சேவற்குஞ்சுகள் Hisex பிறவுண் பேட்டுக்குஞ்சுகள், சேவற்குஞ்சுகள், புறொயிலர் குஞ்சுகள், ஒவ்வொரு வாரமும் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்து பெற்றுக் கொள்ளவும். சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில் (2656)

### விண்ணப்பம்

எமது ஸ்தாபனத்துக்கு பெண் மனேச்சர் பதவிக்கு விண்ணப்பித்தவர்கள் 6-3-90 அன்று காலை 9-00 மணிக்கு சான்றிதழ்களுடன் நேரில் வரவும். தமிழ் பல்துறை சேவை, 28, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(11899)

### புத்தகம்

பங்குனி அம்புலிமாமா, சித்திரக்கதைகள், (50க்கு மேற்பட்ட ரகம்) கண்ணதாசன் எழுதிய நூல்கள், பொக்கட் கலண்டர்கள் சேதுராமனின் அதிஷ்ட விஞ்ஞானம், வேறு பல எழுத்தாளர்களின் எண்சோதிடங்களும் விற்பனை ஆகின்றது. ராஜன் புத்தகசாலை, 12, பஸ்நிலையம் யாழ்ப்பாணம்.
(11927)

### Typewriters

Typewriters வாங்கவும், விற்கவும், சிறந்த முறையில் திருத்திக்கொள்ளவும், நாடுங்கள் FUDO, 39/17 மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம். (Shabra-Samy & Co அருகாமையில்)
(சி/3451)

---

விரைவில் வெளிவருகிறது!

## ஞானக்கதிர்

## பங்குனித் திங்கள் இதழ்!

அம்பாள் அடியார்களுக்கு அருவிருந்து!!

**ஞானக்கதிர்**

அன்பு-அறநெறி – ஆன்மீகம்

★ அம்பாளின் தோற்றம்
★ அம்பாள் வழிபாட்டு முறைகள்
★ அம்பாளுக்குரிய விரதநாட்கள்
★ அம்பாளுக்குரிய நிவேதனப் பொருட்கள், புஷ்பங்கள், நிறங்கள், இலைகள், இரத்தினங்கள் பற்றிய விளக்கம்.
★ அம்பாளின் ஈழத்துத் திருத்தலங்களான;
☐ இணுவில் சிவகாமியம்பாள் ஆலயம்
☐ பன்றித்தலைச்சி அம்பாள் ஆலயம்
சங்கரத்தை பத்திரகாளி அம்பாள் ஆலயம்
☐ திருக்கோணமலை பத்திரகாளி அம்பாள் ஆலயம்
— ஆகியவற்றின் அற்புதங்களும், வரலாறும்
★ பகவான் சாயிபாபா வழங்கிய தினசரிப் பிரார்த்தனை
★ காட்டுச் சாமியாரின் ஸ்பரிச தீட்சை
★ இன்னும் பல ...... !

**பிரதி விலை ரூபா 5/- மட்டுமே**

அம்பாள் அடியார்களே!
உங்கள் பிரதிகளுக்கு முந்துங்கள்!!

● பிரதிகளை தவறாது பெற உதயன் முகவர்களிடம் முன் கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்.

[சி-3422]

---

### புதிய உயர் கல்லூரி
(யாழ் - ஆரியகுளம் சந்தி)

விசேட பிரத்தியேக வகுப்புக்கள் ஆரம்பமாகி விட்டது!

A/L 90 & 91 ★ இரசாயனவியல் ★
by Mr. இராமநாதன்
(91 – பொது இரசாயனம்; 90 பிரிவு A சேதனம், பிரிவு B மீட்டல் வினா – விடை
அடுத்த வகுப்பு 07 – 03 – 1990 புதன் 3 மணி)

● குறிப்பு: 14-02-90 நடைபெறவிருந்த இவ்வகுப்புக்கள் தவிர்க்க முடியாத காரணத்தால் நடைபெறவில்லை.

[2723]

---

## "தேவை"

யாழ் செஞ்சிலுவைச் சங்கத்தின் தொண்டர் வைத்திய சேவையில், வடகிழக்கில் உள்ள அரச வைத்தியசாலைகளில் கடமையாற்றுவதற்கு, யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் பட்டம் பெற்ற, சமூக சேவை விருப்புள்ள வைத்தியர்கள் உடன் தேவைப்படுகின்றார்கள். முழு நேர சேவைக்கான ஊக்குவிப்பு வேதனம் மாதாந்தம் வழங்கப்படும்.

தொடர்பு: தலைவர்,
இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம்,
73, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

(C/3467)

---

## ரங்ஸ்ரம் மின் குமிழ்கள்
## (Tungsram Bulbs)

யாழ் நகரின் ''ரங்ஸ்ரம் மின் குமிழ்களின்''

ஏகவிநியோகஸ்தர்கள் :

**புஷ்ப்பா அன் கோ**
128, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

(C/3457)

---

## அந்தியேட்டி அழைப்பு

திருமதி
**இராசபத்மநாயகி தர்மலிங்கம்**

கொம்மான்தறையை பிறப்பிடமாகவும், நீர்வேலியை உறைவிடமாகவும் கொண்ட இராசபத்மநாயகியின் அந்தியேட்டி 6-3-90 இல் (கீரிமலை வைபவம் உட்பட) நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றாரும் உறவினரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்:

தர்மலிங்கம்
(ஓய்வு பெற்ற தபால் அதிபர்)
பிள்ளைகள்: தசிலா, வோசிந்தா.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

(11897)

---

யாழ்ப்பாண வை. எம். சி. ஏ

## நூற்றாண்டு விழா 1890-1990
## போட்டி நிகழ்ச்சிகள்

1. உள்ளரங்க விளையாட்டுப் போட்டி (கரம், செஸ், ரேபிள்ரெனிஸ், பட்மின்ரன்)
2. உடல் வல்லுநர் போட்டி (Mr Jaffna)
3. கூடைப்பந்தாட்டப் போட்டி (Basket Ball)
4. கரப்பந்தாட்டம் (Volley Ball)
5. வலைப்பந்தாட்டம் (Net Ball)
6. பிராந்திய Y. M. C. A. இடையே உதைபந்தாட்டப் போட்டி
7. மரதன் ஓட்டப்போட்டி
8. சைக்கிள் ஓட்டப்போட்டி ஆண்கள்/பெண்கள்
9. சித்திரப் போட்டி 10 – 15 – 20 வயது எல்லைக்குட்பட்டது
10. கட்டுரைப் போட்டி 10-15-20 வயது எல்லைக்குட்பட்டது
11. வேதாகம வினா – விடைப்போட்டி
12. சேக்ஸ்பியர் நாடகப் போட்டி (பாடசாலைகள் மாத்திரம்)
13. பாட்டுப்போட்டிகள்
14. கைப்பணிப் போட்டிகள் (பிளாஸ்ரிக், மரம், பித்தளை, வெள்ளி)

விபரங்களுக்கு தொடர்பு கொள்க:

எம். தம்பித்துரை
பொதுச் செயலாளர்

[11938]

---

## காணவில்லை



**ஐயாத்துரை - தமிழ்ச்செல்வன்**

கைதடி வயோதிபர் இல்லத்தில் இருந்த ஐயாத்துரை – தமிழ்ச்செல்வன் 15-02-1990ல் இருந்து காணவில்லை. 23 வயதான இவர் 5' 6'' உயரமும் கறுப்பு நிறமும், விவேகம் குறைந்தவரும் ஆவார். இவரைப் பற்றிய தகவல் அறிந்தோர் தயவுசெய்து கைதடி வயோதிபர் இல்லத்திற்கு அறியத் தரவும்.

நன்றி!

தகவல்:
தகப்பன்: ஐயாத்துரை.

[11951]

---

## கம்பியூட்டர் கல்வி

✶ Diploma in Data Processing and Computer Programming in BASIC LANGUAGE

ஆரம்பம்: 07 Mar. 1990
(திங்கள், புதன், வெள்ளி வகுப்புக்கள்) 8.30 a.m
10 Mar. 1990
(சனி, ஞாயிறு வகுப்புக்கள்) 4.00 p.m.

✶ WORD PROCESSING

ஆரம்பம்: 10 Mar. 1990
(சனி, ஞாயிறு, வகுப்புக்கள்) 4 p m

O/L படித்த இருபாலாரும் சேரலாம். மிகவும் விளக்கமான முறையில் பயிற்சி அளிக்கப்படும். பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

**Practical on IBM (Compatible Machines)**




**UNIKCO COMPUTER CENTRE**
No. 5, Power House Road.
2nd Lane, Jaffna.

(சி/3958)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



**செல்லையா விஸ்வரத்தினம்**
(ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர்)

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 08 – 12 – 1930 | 04 – 02 – 1990 |

எங்கள் குடும்பத் தலைவனே! வாழ்க்கையில் எனக்கும் இப்படியும் ஒரு சோதனையா? கண்ணீரில் மூழ்குவதுதான் என் கதையா? நான் என் கண்ணீர்ப் பூக்களால் ஓம் சாந்தி சாந்தி என்று வாழ்த்துகிறேன் அன்பு மனைவி.

எங்கள் அன்பும் பண்பும் நிறைந்த அப்பா! இனி நாங்கள் யாரைத் தான் அப்பா என்று அழைப்பது? தினமும் உங்கள் முகத்தை பார்த்து பார்த்த எங்களுக்கு உங்கள் முகத்தைப் பார்க்காமல் இருக்க முடியாமல் இருக்கிறதே அப்பா. உங்கள் இனிய குரலை எப்போ கேட்பது அப்பா. இடையில் எங்களை விட்டு விட்டுப் போய் விட்டீர்களே அப்பா! உங்கள் மறைவு எல்லோருக்கும் அதிர்ச்சியாகவே இருக்காம். அப்பா உங்கள் உடல் அழிந்தாலும் நீங்கள் காட்டிய அன்பும், உங்கள் நினைவு தினமும் அழியாது அப்பா உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றென்றும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அந்தியேட்டி 05-03-1990 இல் கீரிமலையிலும் வீட்டுக்கிருத்தியம் 06-03-1990 இல் வீட்டிலும் நடக்கும். உற்றாரே நண்பர்களே வருக வருக என அழைக்கின்றோம்.

அன்னாரின் ஈமக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் ஆதரவு புரிந்தோருக்கும் எமது இதயம் கனிந்த நன்றி.

உங்கள் பிரிவால் வாடும்
மனைவி, மக்கள்,
சகோதரர்கள், சகோதரிகள்,
மைத்துனர்கள், உறவினர்கள்.

தெற்கு,
உரும்பிராய்.

[11952]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

கரப்பவர்க்கு யாங்கொளிக்குங் கொல்லோ இரப்பவர்
சொல்லாடப் போஒம் உயிர்.

**பொருள்:**

இரப்பவர் 'இல்லை' என்று சொல்கின்ற அளவிலேயே உயிர்போகின்றதே! உள்ளதை இல்லை என்று ஒளிப்பவர்க்கு உயிர் எங்கு ஒளிந்திருக்குமோ?

உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 2288
05-03-1990    த. பெ. இலக்கம் : 23

# அரசியல் சிந்தனைகளின் மாற்றமா?

கடந்த வாரம் இந்தியாவில் எட்டு மாநிலங்களிலும் ஒரு யூனியன் பிரதேசத்திலும் தேர்தல்கள் நடைபெற்றன. தமிழ்நாடு மாநிலத்தில பழனி நாடாளுமன்றத்துக்கான இடைத் தேர்தலும் நடைபெற்றது.

இதனை எழுதிக்கொண்டிருந்த சமயம் ஒரு சில இடங்கள் தவிர்ந்த பெரும்பாலான முடிவுகள் வெளிவந்திருந்தன.

இந்த எட்டு மாநிலங்களில் மகாராஷ்டிரத்திலும், அருணாச்சல் பிரதேசத்திலும் முன்னால் பிரதமர் ராஜீவ் காந்தி தலைமையிலான இந்திரா காங்கிரஸ் பெரும்பான்மை பலம் பெற்று தனித்து ஆட்சி அமைக்கின்றது.

ஹிமாச்சல பிரதேசம், மத்திய பிரதேசம் ஆகிய இரண்டிலும் பாரதீய ஜனதாக்கட்சி தனித்து ஆட்சி அமைக்கும் பெரும்பான்மை பெற்றுள்ளது.

ராஜஸ்தானில் ஜனதாதள்ளின் ஆதரவுடன் பாரதீய ஜனதாக் கட்சி ஆட்சி அமைக்கின்றது.

குஜராத்தில் பாரதீய ஜனதாக் கட்சியின் ஆதரவுடன் ஜனதா தள் ஆட்சி அமைக்கின்றது.

மற்றொரு மாநிலமான பிஹாரில் பாரதீய ஜனதாவா? அல்லது ஜனதா தள்ளா? ஆட்சி அமைக்கும் என்பதில் இன்னும் நிச்சயமற்ற நிலைமை இருந்து வருகின்றது, ஒரிசாவில் மாத்திரமே ஜனதாதள் தனித்து ஆட்சி நடத்தும் பெரும்பான்மை பெற்றிருக்கின்றது.

மற்றும் யூனியன் பிரதேசமான பாண்டிச்சேரியில் தி. மு. க மிகக் குறைந்த பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்க உள்ளது. அதே போன்று பழனி நாடாளுமன்ற இடைத்தேர்தலில் வெற்றி பெற்ற இந்திரா காங்கிரஸ் முன்னைய தேர்தலில் பெற்ற பெரும்பான்மையை விட குறைந்த பெரும்பான்மையுடனேயே வெற்றி பெற்றிருக்கின்றது.

கடந்த வாரத் தேர்தல்களில் முக்கிய அம்சம் வலது சாரி இந்து மரபு வாத பாரதீய ஜனதாக் கட்சியின் எழுச்சியே.

தீவிரவாதக் கொள்கைகளைக் கொண்டுள்ள இக் கட்சி கடந்த நாடாளுமன்றத் தேர்தல்களின் போது எதிர்பாராத விதமாக லோக் தள்ளுக்கு அடுத்ததாக தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்திருந்தது.

தற்போது மாநில சட்ட மன்றத் தேர்தல்களிலும் அது பெற்றுள்ள எதிர்பாராத வெற்றிகள் இந்திய மக்களின் அரசியல் சிந்தனைகள் மாற்றம் அடைவதையே காட்டுகின்றன.

அதுமட்டுமல்ல. விஸ்வநாத் பிரதாப் சிங்கின் ஜனதா தள் ஆட்சிக்கும் இது ஒரு சவாலாக உருவாகி வருகிறது.

தற்போது மத்தியில் பாரதீய ஜனதாக்கட்சியினதும் இரு கம்யூனிஸ்ட் கட்சிகளினதும் ஆதரவுடனேயே விஸ்வநாத் பிரதாப் சிங் ஆட்சி நடத்தி வருகின்றார். இந்த ஆதரவு எப்போது இல்லாமல் போகிறதோ அன்றே அவரின் ஆட்சி கவிழ்ந்து விடும்.

தற்போதைய தேர்தல் முடிவுகள் பாரதீய ஜனதாக்கட்சியின் கையையே மேலும் ஓங்க வைத்துள்ளது.

பஞ்சாப் பிரச்சினை, இராமஜன்ம பூமி பிரச்சினை, பாகிஸ்தான் பிரச்சினை ஆகியவற்றில் கடுமையான போக்கைக் கடைப்பிடிக்க வேண்டிய நிர்ப்பந்தம் பிரதமர் விஸ்வநாத் பிரதாப் சிங்குக்கு உருவாகி வருகின்றது.

தேர்தல் முடிவுகள் காங்கிரஸைப் பொறுத்தவரை பெரிய மாற்றம் எதனையும் ஏற்படுத்த வில்லை. கடந்த நவம்பர் நாடாளுமன்றத் தேர்தல் தோல்வியில் இருந்து காங்கிரஸ் இன்னும் விடுபடவில்லை என்பதை இந்த முடிவுகள் எடுத்துக் காட்டுகின்றன.

தற்போதைய தோல்வியால் காங்கிரஸ் உறுப்பினர்கள், தொண்டர்கள் மட்டத்தில் அதிருப்தி நிலவினாலும் ராஜீவ்காந்தியின் தலைமைக்கு அது ஆபத்தாக மாறமாட்டாது என்று அவதானிகள் நம்புகின்றனர்.

எனினும், 100 வருடகால பழமை வாய்ந்த காங்கிரஸ் கட்சியின் எதிர்காலம், மக்களின் எதிர்பார்ப்புகள் எவ்வளவு தூரம் தற்போதைய அரசால் நிறைவேற்றப்படுகின்றன என்பதிலேயே தங்கி இருக்கின்றது.

# பலாலி விமான விஸ்தரிப்பு
## வீடு, காணி, இழந்தோருக்கு 100 வீடுகள் வழங்கப்படும்

காங்கேசன்துறை மார்ச் 5

பலாலி விமான நிலைய விஸ்தரிப்பால் வீடுகளையும்காணிகளையும் இழந்து நிர்க்கதியாகியுள்ள மக்களுக்கு வயாவிளான் சுதந்திரபுரத்தில் 100 வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட உள்ளன.

அரசாங்க உதவியாக தலா 15 ஆயிரம் ரூபா செலவில் இந்தவீடுகள் அமைக்கப்பட்டு மேற்படி மக்களுக்கு வழங்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த வீடுகளைப் பெற விரும்புவோரிடமிருந்து விண்ணப்பங்கள்கோரப்பட்டபோது 150க்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைத்ததாகவும்,இதில் 100 விண்ணப்பங்களே தெரிவு செய்யப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

(86-இ)

## ஆத்மசாந்தி பிரார்த்தனை

யாழ்ப்பாணம் மார்ச்05

யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா சமிதியின் திமுன்னைநாள் தலைவர் திரு. கே. வி. சபாரத்தினம் மறைவை முன்னிட்டு ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் மகேஸ்வர பூசையும் நடைபெறவுள்ளன.

இப் பிரார்த்தனை எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமை திருநெல்வேலி சேர் பொன் இராமநாதன் வீதியில் அமைந்துள்ள பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா சமிதி மண்டபத்தில் இடம் பெறும்

(இ-சி)

## இடமாற்றம்

கொடிகாமம், மார்ச். 5

கொடிகாமம் தபாலக துணை அதிபர்களுள் ஒருவரான திரு. செ. சிவபாத சுந்தரம் அநுராதபுர மாவட்டத்தைச் சேர்ந்த நாகம் பஹா தபாலகத்துக்கு பதவி உயர்வுடன் இடமாற்றம் பெற்றுள்ளார்.

(இ-75)

# 3 மாதத்திற்கு கூடிய நிலுவையா?
## மின் அபிவிருத்தி வேலைகள் செய்து கொடுக்கப்பட மாட்டாது

யாழ்ப்பாணம், மார்ச்.5

மூன்று மாதத்திற்கு அதிகமாக மின்சார கட்டணத்தை நிலுவையாகச் செலுத்த வேண்டியிருக்கும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு மின் அபிவிருத்தி வேலைகள் செய்து கொடுக்கப்படமாட்டாது.

இலங்கை மின்சாரசபை சகல உள்ளூராட்சித் திணைக்களங்களுக்கு இதை அறிவித்துள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களுக்கு மின்சாரம் வழங்கிய வகையால் கோடிக்கணக்கான பணம் நிலுவையாக வர வேண்டி உள்ளது.

இதைத் தொடர்ந்தே புதிய விதிமுறைகளை மின்சார சபை நடைமுறைப்படுத்தியுள்ளது.

மூன்று மாதத்திற்கு குறைவான கட்டணத்தை நிலுவையாகச் செலுத்த வேண்டியிருக்கும் சபைகளுக்கு மட்டுமே உபமின் நிலையம் அமைத்தல் உட்படமற்றைய அபிவிருத்தி வேலைகளைச் செய்து கொடுக்க முடியும் என மின்சார சபை தற்போது அறிவித்துள்ளது. (உ-3)



ஜெனிவாவில் இருந்து வருகைதந்த ஐ. நா. அகதிகள் ஸ்தானிகராலய அதிகாரிகள் யாழ். கல்வித் திணைக்கள முறைசாரப் பிரிவுக்கு விஜயம் செய்தனர். இந்தப் பிரிவின் அபிவிருத்தி திட்டங்களை பார்வையிடும் போது எடுக்கப்பட்ட படம். (இ-10)

# படை வெளியேற்றத்துடன் போராட்டம் முடியவில்லை
## நெடுமாறன் கூறுகிறார்

அச்சுவேலி மார்ச். 05

''தமிழீழப் போராட்டம் இந்திய இராணுவத்தை வெளியேற்றியதுடன் முடிந்துவிடவில்லை.

தமிழ் நாட்டு அரசியல் பிரமுகர் திரு. நெடுமாறன் அச்சுவேலி பயிற்றோலைப் பகுதிக்கு விஜயம் செய்த போது இவ்வாறு கூறினார்.

வியட்நாம் மக்கள் அமெரிக்க இராணுவத்தை வெளியேற்ற பல்வேறு நாடுகளின் உதவியைப் பெற்றார்கள் ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகள் எந்த நாட்டின் உதவியுமின்றிஇந்தியஇராணுவத்தை வெளியேற்றினார்கள்.

இப்படி அவர் மேலும் கூறினார். (இ - 11)

# செத்தல் மிளகாய் விலை வவுனியாவில் வீழ்ச்சி

சேமடு, மார்ச் 5

வவுனியாவுக்கு பதவியாப் பிரதேசத்திலிருந்து பெரும் தொகையான செத்தல் மிளகாய்வரத்தொடங்கியுள்ளது.

இதனால் வவுனியாச் சந்தையில் கிலோ எண்பது ரூபாவாக விற்ற செத்தல் மிளகாய்யின் விலை55ரூபாவாக குறைந்துள்ளது.

இதே நேரத்தில்வவுனியாப் பிரதேசத்தில் மிளகாய்ச் செய்கைக்கு இவ்வருடம் பலத்த சோதனை ஏற்பட்டுள்ளது.

மிளகாய்ச் செய்கைக்கு முக்கிய உரமாக விளங்கும் யூரியா விலை அதிகரிப்பே இதற்கான காரணமாகும்.

50 கிலோ ரூபா 275 விற்ற யூரியாவின் விலை இப்போது 425 /- ஆக அதிகரித்து விட்டது,

இதனால் விவசாயிகள் பாதிப்படைந்து உள்ளனர். (இ-37)

## குருகுலம் ஆண்டு விழா

கிளிநொச்சி மார்ச் 5

கிளிநொச்சி குருகுலம் ஆண்டு விழாவும், கொடித்தினமும் எதிர்வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தலைமைப்பீட உதவி அரசாங்க அதிபர் திரு. க. துரைராசா தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக சர்வோதய நிவாரண புனர்வாழ்வுப்பணிப்பாளர் திரு. ஏ. ஜே. செந்தில்நாதனும், சிறப்பு விருந்தினராக, கரைச்சி உதவி அரசாங்க அதிபர் க. வேலுப்பிள்ளையும், தமிழ் அகதிகள் புனர்வாழ்வு கழகத் தலைவர், பேராசிரியர் கா. சிவத்தம்பியும் கலந்து கொள்வார்கள். (இ- 76)

# சான்றிதழ் வழங்கும் வைபவம்

கொழும்புத்துறை மார்ச். 05

ஜுனாயிலுள்ள சிறுவர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி நிலையத்தால் நடத்தப்படும் சான்றிதழ் வழங்கும் வைபவம் வட்டுக்கோட்டையில் உள்ள யாழ்ப்பாணக் கல்லூரித் தொழில் நுட்பக் கல்லூரியில் இன்று திங்கள் பிற்பகல் 2 மணிக்கு நடைபெற இருக்கிறது.

இவ் விழாவில் யுனிசெப் ஸ்தாபனத்தின் திட்ட அதிகாரி திரு.கை.ஸ்கலோன் பிரதம விருந்தினராகப் பங்குபற்றுவார்.

கூட்டம் சிறுவர் பாடசாலைப் பொறுப்பதிகாரி திருமதி இ. பொன்மலர் தலைமையில் நடைபெறும். (இ - 30).

# வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யச் சலுகை

யாழ்ப்பாணம் மார்ச். 05

யாழ். கிளிநொச்சி மாவட்டங்களில் வதியும் இந்திய வம்சாவழியினர் வாக்காளர் இடாப்பில் பதிவு செய்ய சலுகை வழங்கப்பட்டுள்ளது.

கடந்த வருட வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யத் தவறியவர்களுக்கே இந்த சலுகை வழங்கப்பட்டுள்ளது.

மே மாதம் 8 ஆம் திகதி வரை பதிவு செய்ய விண்ணப்பிக்கும்படி கோரப்பட்டுள்ளது. (இ - 3)

## வட்ட தீபம் மலர் வெளியீடு

கிளிநொச்சி வட்டக்கச்சி மகாவித்தியாலய உயர்தர மாணவர் மன்றத்தின் ''வட்ட தீபம்'' மலர்வெளியீட்டுவிழா அண்மையில் வட்டக்கச்சி கொத்தணி அதிபர் திரு. ப. அரியரத்தினம் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

விழாவின் முதன்மை விருந்தினராக கலந்து கொண்ட பிரதிக்கல்விப்பணிப்பாளர் திரு.இ.வேலாயுதம்ஆசியுரை வழங்க வை. முரளிதரன் வரவேற்புரை வழங்கினார்.

# சேவைக்கு ஏற்றவாறு சம்பளம் வழங்கவேண்டும்
## முல்லைத்தீவுக்கிளை கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 5

அரச சேவையில் 1-1-88 முதல் உள்ள பொது எழுதுவினைஞர்களுக்கு புதிய சம்பளம் வழங்கும் விடயத்தில் பெரும் அநீதி இழைக்கப்பட்டுள்ளது. ஆகவே அவர்கள் சேவைக்கு ஏற்றவாறு சம்பளத்தை வழங்க வேண்டும்

இப்படி அரசைக் கோரியுள்ளது அரசாங்க எழுதுவினைஞர் சங்க முல்லைத்தீவுக் கிளை.

இந்தக் கிளையின் கூட்டம் முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

கிளைத்தலைவர் திரு. செ. மெற்றாஸ்மயில் தலைமையில் நடைபெற்றது.

அங்கு நிறைவேற்றப்பட்ட மற்றுமொரு தீர்மானம் வருமாறு:

பொது நிர்வாக அமைச்சின் சுற்றுநிருபம் 40 / 89க்கு அமைவாக வழங்கப்பட வேண்டிய ஊக்குவிப்புப்படி வடக்கு- கிழக்கு மாகாணத்தில் உள்ள பல திணைக்கள ஊழியர்களுக்கு வழங்கப்படவில்லை. உடனடியாக அவர்களுக்கும் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

புதுவருட நிர்வாகிகள் தெரிவில் திரு. செ. மெற்றாஸ்மயில் தலைவராகவும், திரு. ச. மகாலிங்கம்துணைத் தலைவராகவும், திரு. க. தங்கராசா செயலாளராகவும், திரு. ஏ. எம். றிபாய் துணைச் செயலாளராகவும், சி. மேரி. பெயற்றிஸ் பொருளாளராகவும், எம். ஐ. எம். முஸர்றப் துணைப் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

ஐவர் செயற்குழு உறுப்பினரயும் தெரிவு செய்யப்பட்டனர். (இ-3)

# யாழ். தேர்தல் திணைக்கள உடமைகள் மாயமாக மறைவு

யாழ்ப்பாணம், மார்ச்.5

கடந்தகால வன்செயலின் போது யாழ்-தேர்தல் திணைக்களத்தின் உடமைகள் யாவும் அழிக்கப்பட்டுள்ளது. புனரமைப்பு அமைச்சிடம்இருந்து நஷ்டஈடு பெற முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன.

வடபிராந்திய தேர்தல் ஆணையாளர் இத் தகவலைத் தெரிவித்தார்.

கடந்த காலத்தில் பழைய கச்சேரியில் தேர்தல் திணைக்களம் இயங்கிவந்தது.

87 ஆம் ஆண்டு இந்தியப் படையினர் அந்தக்கட்டடத்துக்கு வந்தபின் இந்ததிணைக்களத்துக்கு சொந்தமான உடமைகள் யாவும் மாயமாக மறைந்துவிட்டன.

தட்டச்சு,றோனியோ இயந்திரங்கள் 1000க்கு மேற்பட்ட வாக்குப் பெட்டிகள், அலுவலக உபகரணங்கள், தளபாடங்கள் ஆகியன காணாமல் போய்விட்டன.

அத்துடன் 87 ஆம் ஆண்டு முன் பதிவு செய்தவர்களின் வாக்காளர் இடாப்புக்களும் நர்சமாகியுள்ளன என்றும் அந்த அதிகாரி மேலும் சொன்னார் (இ-3)

## ரயில் நிலையங்கள் திருத்தப்படும்

யாழ்மாவட்டத்தில் திருத்தம் செய்யப்படாதிருக்கும் பல ரயில் நிலையங்களை திருத்தம் செய்வதற்கு புனர்வாழ்வு அமைச்சு நடவடிக்கை எடுத்துள் ளது.

# அரச எழுதுவினைஞர் சங்கம் செயற்பட ஆரம்பம்

தொழிற்சங்கங்களுக்கு அரசு விதித்திருந்த தடைகளை நீக்கியதை அடுத்து அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் மீண்டும் செயல்பாடுகளை ஆரம்பித்துள்ளது.

தமிழ் அரச ஊழியர்களுக்காக குரல் கொடுத்து வந்த இந்தச் சங்கம் 1980 ஆம் ஆண்டு அரசால் விதிக்கப்பட்ட தடையால் தன் செயல்பாடுகளை நிறுத்தியிருந்தது.

அரசு தொழிற்சங்கங்கள் மீது விதித்திருந்த தடைகளை நீக்கியதையடுத்து இந்தச் சங்கம் தன் செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளது.

கிளைகளைப் புனரமைக்கும் பணி தற்சமயம் நடைபெறுகிறது. (இ-3)

## வாசகர் திருமுகம்

### இவர்கள் ஏன் புறக்கணிப்பு

பயிலுநர் ஆசிரியர் தெரிவின்போது யாழ். கல்வித் திணைக்களம் ஜனசவிய உதவித்திட்டத்தின் கீழ் உதவி பெற்று நேர்முகப் பரீட்சையின் போது கூடிய புள்ளிகளைப் பெற்றவர்களுக்கு ஆசிரிய நியமனம் வழங்குவதை விடுத்து குறைந்த புள்ளிகளைப்பெற்றவர்களும் ஜனசவிய உதவித்திட்டத்தின் கீழ் உதவி பெறாதவர்களையும் தெரிவு செய்திருப்பதனைக் காணக்கூடியதாக இருக்கிறது.

இக்குறையினை வேலணைக் கோட்டக்கல்வி அலுவலகத்தில் இடம்பெற்றுள்ள பெயர் பட்டியலில் காணக்கூடியதாக இருக்கின்றது.

உயர்கல்விச் சித்தி பெற்றோர் வேறு வேலைக்கு நியமனம் பெறுவார்கள் எனக் கூறிச் சமாளிக்கும் அதிகாரிகள், இவர்கள் வேறு வேலைகள் கிடைக்காமல் தான் இவ்வேலைக்கு அலைகிறார்கள் என்பதனை அறிவார்களா?

எனவே இது விடயத்தில் இன்று 5ஆம் திகதி கூடவிருக்கும் பயிலுநர் ஆசிரியர் தெரிவின் மீளாய்வுக்குழு கல்வித் தகமையில் உயர்ந்த கூடிய புள்ளிகள் பெற்றவர்களையே பயிலுநர் ஆசிரியர்களாகத் தெரிவு செய்ய வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றோம்.

சி. சுந்தரம்
காவலூர்த் தொகுதி.

### யாழ் செயலக குளறுபடி

நான் கடந்த 27-6-88 இல் A 13360 இலக்கத்தைக் கொண்ட விண்ணப்பம்மூலம் யாழ் / செயலகத்தேயுள்ள பிறப்பு/இறப்பு/விவாகப் பதிவாளருக்கு எனது விவாகச் சான்றிதழுக்கு விண்ணப்பித்திருந்தேன்.

எனது முகவரியிடப்பட்ட கடித உறையையும் இணைத்திருந்தேன்.

ஆனால் எனது விவாகச் சான்றிதழுக்குப் பதிலாக வேலணை கிழக்கைச்சேர்ந்த பகீரதன் என்பவரின் பிறப்புச் சான்றிதழை ஒரு வருடம் நான்கு மாதங்களின் பின் எனக்கு அனுப்பியுள்ளார்கள்.

இதைத் திருப்பி செயலகத்துக்கு அனுப்புவதால் உரியவர்களிடம் கிடைக்குமோ என்பது கேள்விக்குறி.

எனவே, தங்கள் சேவை மூலம் இம்மூன்று பிரதிகளையும் உரியவர்களிடம் சேர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

எஸ். ஆர். அருமைநாயகம்
அராலி வடக்கு.

## கண்டதும் கேட்டதும்

வவுனியாவில் இருந்து ஒரு பஸ் யாழ்நகர் நோக்கி வந்து கொண்டிருந்தது. அதில் பிரயாணம் செய்து கொண்டிருந்த பெண் ஒருவர் 100 ரூபாவைக் கொடுத்து யாழ்நகருக்கு ரிக்கற் எடுத்தார். அவருக்கு மிகுதிப் பணம் கொடுபடவில்லை. பரந்தன் வந்தது, கண்டக்டரிடம் கேட்டார். அப்போதுதான் தெரிந்தது; வவுனியாவில் கடமையாற்றிய பஸ் கண்டக்டர் கிளிநொச்சியில் மாறிப் போய்விட்டார்.

புதிய கண்டக்டர் மிகுதிப் பணம் கொடுக்கவில்லை. இ. போ. ச. சட்டங்களின்படி பழைய கண்டக்டர் தான் மிகுதிப்பணம் கொடுப்பார் என்றும், டிப்போவில் சென்று கேட்குமாறும் இந்தக் கண்டக்டர் கூறினார்.

கண்டக்டர் கிளிநொச்சியில் மாறியபோது இது சம்பந்தமாகப் பிரயாணிகளுக்கு எதுவும் சொல்லவில்லை எனப் பிரச்சினை கிளம்பியது. பஸ் ஒரே வாதப் பிரதிவாதக்களமாக மாறியது.

தனது கடமையில் இருந்து மாறிச் செல்லும் கண்டக்டர்கள் உரிய முறையில் பிரயாணிகளிடம் அறிவித்து, மிகுதிப்பணத்தைக் கொடுக்கவேண்டும்.

உயர் அதிகாரிகளுக்கு இது சமர்ப்பணம்.

செய்திலோலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜோதிட ஜோதி

முன்விலை - முயற்சி - திருவருள்

## மாசி இதழ்
### வெளிவந்துவிட்டது!

- ✶ சனிப் பெயர்ச்சியும் உங்கள் பலனும்
- ✶ உங்களுக்கு இம்மாதம் எப்படி?
- ✶ பிரயாணம் செய்ய நல்லநேரம்
- ★ எண் தத்துவம் 6 — 7
- ✶ சோதிடம் பயில்வோம்
- ✶ ரமண மகரிஷியின் சாதகக் குறிப்பு
- ✶ சுபயோகங்கள்

**இன்னும் பல அம்சங்கள்....**

பிரதி விலை ரூ. 10/-

உதயன்
முகவர்களிடம் பிரதிகளை வாங்குங்கள்!

[சி-3416]


சாவகச்சேரி நகரசபை

## கேள்வி அறிவித்தல்

**சாவகச்சேரி பஸ் நிலையத்தின் முன்பாக கட்டப்பட்டுள்ள கடைகளில் வியாபாரம் செய்யும் உரிமை**

01. சாவகச்சேரி பஸ் நிலையத்தின் முன்பாகக் கட்டப்பட்டு இன்னும் வழங்கப்படாமல் மீதியாக இருக்கும் 4 கடைகளிலும் வியாபாரம் செய்யும் உரிமைக்கான, அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் இலங்கைப் பிரஜைகளிடமிருந்து 16 - 03 - 90 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.15 மணிவரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.
02. கேள்விப்பத்திரங்கள் 15 - 03 - 90 ஆம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12.30 மணி வரை கேள்விப் பத்திரக் கட்டணமாக ரூபா 100/- வும் மீளளிப்புச் செய்யப்படும் கேள்வி பாதுகாப்பு வைப்புப்பணமாக ரூபா 1000/- வும் செலுத்துபவர்களுக்கே வழங்கப்படும்.
03. நிரப்பப்பட்ட கேள்விகள் குறிக்கப்பட்ட தினத்தன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ கிடைக்கக் கூடியதாக "தலைவர், நகரசபை, சாவகச்சேரி" என முகவரியிடப்பட்டு, உறையின் இடதுபக்க மேல்மூலையில் "கடைகளுக்கான கேள்வி" எனக் குறிப்பிடப்பட்டு, பதிவுத் தபால் மூலமாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது இச்சபையின் காரியாலயத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் போடப்படல் வேண்டும்.
04. தற்பொழுது இந்நகரசபையின் கடைகளில் ஏதாவது ஒன்றின் பதிவுசெய்யப்பட்ட வாடகைக்காரராக இருப்பவருக்கோ அல்லது அன்னாரது கணவன் / மனைவி எவருக்கேனும் கேள்விப் பத்திரம் வழங்கப்படமாட்டாது.
05. தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் சபையினால் அங்கீகரிக்கப்படும் முறையிலான கதவுகளைத் தங்களது செலவில் தயாரித்துப் பொருத்துதல் வேண்டும்.
06. கடைகளைத் தெரிவு செய்யும் முன்னுரிமை, கூடிய கேள்வியின் அடிப்படையில் வழங்கப்படும்.
07. தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் அவரது கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்ட பின் கடையைப் பொறுப்பேற்காதுவிடின், அவரது கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்படமாட்டாது.
08. ஒருவர் ஒரு கேள்விக்கு மேல் சமர்ப்பிக்க முடியாது.
09. மேற்படி கடைகளில் கீழ் வரும் வியாபாரங்கள் செய்வதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.
    - (அ) பலசரக்கு வியாபாரம்
    - (ஆ) தேநீர்க்கடை
    - (இ) மீன் / இறைச்சி / கருவாடு / இறால் முதலியன விற்பனை செய்தல்
10. கேள்விகளை ஏற்றுக் கொள்ளவோ, நிராகரிக்கவோ சபைக்குப்பூரண அதிகாரமுண்டு.
11. ஒவ்வொரு கடையின் குறைந்த கேள்வித் தொகை ரூபா 50,000/- ஆகும்
12. இது சம்பந்தமான மேலதிக விபரங்களை இந்த அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

த. நவரத்தினராசா
(தலைவருக்காக)
நகரசபை, சாவகச்சேரி

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி.
01-03-1990

[சி-3453]

# தேர்தல் மூலம் ஜனாதிபதி தெரிவு சோவியத்தில் அமுலுக்கு வரும்

## எனினும் முதலாவது தேர்தல் 4 ஆண்டுகள் கழித்தே

மாஸ்கோ மார்ச். 04

மக்களால் நேரடியாக ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் முறை சோவியத் யூனியனில் அறிமுகப்படுத்தப்பட உள்ளது.

இதற்கான அங்கீகாரத்தை சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் உயர் பீடம் வழங்கியிருக்கிறது.

இம்மாதம் 12 ஆம் திகதி கூடும் சோவியத் நாடாளுமன்றத்தில் இதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்ட பின்னர் புதிய நடைமுறை அமுலுக்கு வரும்.

ஆனால் இந்தத் திட்டத்தின்கீழ் தற்போதைய ஜனாதிபதி மிக்கெய்ல் கோர்பச்சேவ் உடனடியாக தேர்தல் ஒன்றை எதிர்நோக்கவேண்டியது இல்லை என்று அறிவிக்கப்படுகிறது.

புதிய அதிகாரங்களுடன் இவர் தொடர்ந்து அடுத்த 4 ஆண்டுகளுக்கு ஜனாதிபதியாகப் பணிபுரிவார்.

நான்கு ஆண்டுகள் கழித்தே ஜனாதிபதி ஒருவரைத் தெரிவு செய்யும் தேர்தல் நடத்தப்படும். அப்போதுதான் மக்கள் நேரடியாக வாக்களித்து ஜனாதிபதியைத் தெரிவு செய்வர். (எ)

### யுத்த நிறுத்தம்

மனாகுவா மார்ச் 4

பதவிவிலக உள்ள நிக்கரகுவா ஜனாதிபதி ஜெனறல் ஒற்றேகா அமெரிக்க ஆதரவு பெற்ற கொன்றா கிளர்ச்சியாளருக்கு எதிரான யுத்தத்தில் தன்னிச்சையாக யுத்த நிறுத்தம் ஒன்றைக் கடைப்பிடிக்கப் போவதாக அறிவித்தார் (எ)

### முட்டுக்கட்டை நீக்கும் பேச்சு

லுஸாக்கா மார்ச் 4

ஆபிரிக்கத் தேசியக் காங்கிரஸின் உயர்மட்டக்குழு ஒன்று இம் மாதம் தென் ஆபிரிக்க வெள்ளை இன அரசின் ஜனாதிபதி டி கிளேர்க்கைச் சந்தித்துப் பேச இருக்கிறது.

முறையான பேச்சுக்களை நடத்த முட்டுக் கட்டையாக இருக்கும் விஷயங்கள் குறித்தே பூர்வாங்கக் கலந்துரையாடல் அமையும் என்று தெரிகிறது.

### சோவியத் படைகள் வாபஸ்

மாஸ்கோ, மார்ச் 4

மங்கோலியாவில் உள்ள தனது துருப்புக்கள் அனைத்தையும் 1992 ஆம் ஆண்டு இறுதிக்குள் வாபஸ் வாங்கிக் கொள்ளப் போவதாக சோவியத் யூனியன் அறிவித்தது. (எ)

### நீச்சல் உடை ஏலம்

லண்டன் மார்ச் 4

மறைந்த கவர்ச்சி நடிகை மார்லின் மன்றோவின் 1954 ஆம் ஆண்டில் அணிந்த நீச்சல் உடை 3 ஆயிரத்து 500 டாலருக்கு லண்டனில் ஏலம்போனது.

வியட்னாம் அகதிகளை பலத்காரமாக தாயகம் திருப்பி அனுப்புவதை எதிர்க்கும் இயக்கத்துக்கு நிதிசேகரிப்பதற்காக இந்த ஏலம் நடத்தப்பட்டது (எ)

### ராஜீவின் தலைமை தொடரும்

பெங்களூர் மார்ச்4

அண்மையில் நடந்த மாநிலத்தில் இந்திரா காங்கிரஸ் கட்சி அடைந்த தோல்வி திரு. ராஜீவ் காந்தியின் தலைமையை பாதிக்காது என்று கர்நாடக முதலமைச்சர் வீரேந்திரா பாட்டில் தெரிவித்தார்.

கர்நாடக மாநிலத்தில் இந்திரா காங்கிரஸ் பலமாக இருக்கிறது. ராஜீவ் காந்தியின் தலைமையை கர்நாடக காங்கிரஸ் ஏற்கிறது.

இப்படி திரு. வீரேந்திர பாட்டில் தெரிவித்தார். (எ)

### ஐ.நா. அதிகாரி

புதுடில்லி மார்ச். 04

தகராறுக்குரிய காஷ்மீர் எல்லையை நேரிற் சென்று பார்க்க ஐ.நாவின் உயர் இராணுவ அவதானி ஒருவர் இம் மாதம் 7 ஆம் திகதி இந்தியா விஜயம் செய்ய இருப்பதாக செய்தி வெளியாகி இருக்கிறது.

இச்செய்தி பற்றி கருத்துத் தெரிவித்த புதுடில்லி இந்திய வெளியுறவு அமைச்சு அதிகாரி கருத்து வெளியிடுகையில் ஐ.நா முடிவு குறித்து ஆச்சரியம் தெரிவித்தார்.

1972 இல் பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையே ஏற்பட்ட சிம்லா உடன்பாட்டின் பின்னர் காஷ்மீர் விஷயத்தில் ஐ.நா தலையிடுவதற்கு காரணமே இல்லை என்று இந்த அதிகாரி தெரிவித்தார். (எ)


## COULD THIS BE THE CAREER 'BREAK' YOU'VE BEEN WAITING FOR?

An Insurance Company which would be established shortly in Jaffna has Vacancies for:

**Manager**

Possess a pleasing personality and ability to negotiate with Heads of Mercantile and State institutions connected with the insurance.

Possess extensive experience in general administration and personnel management

Responsibility and initiative are vital The successful candidate will be required to plan and implement work systems liaise with appropriate authorities and run the operation of the company independently.

Considerable emphasis will be given to personal qualities of applicant such as maturity, initiative, enthusiasm, innovative thinking, good public relations and business acumen.

**Age:** Above 40 years

**Canvassers**

With a proven experience of 5 years in this field and a good command of English language both written and spoken is essential. Should have minimum qualification of G. C. E (O/L). A desire for field work and possessing riding and driving licence are an advantage.

**General Clerks** (Males / Females)

Educational qualifications and Experience:

G. C. E. (A/L) and pass in 6 subjects in G. C. E. (O/L) Examination with 4 credit passes one of which should be English. one year experience in insurance related clerical work. Duties include filing, handling of other mail, customer inquiries and documentation. Should be able to attend to correspondence independently.

**Age:** 20 to 35 years

**Typist Clerk (English) — Female**

Educational qualifications and Experience:

G. C. E. (A/L) and pass in 6 subjects in G.C.E (O/L) Examination with 4 credit passes one of which should be English. Three (3) years experience as an English Typist in a reputed firm is essential. Knowledge in manupulating El ctric / Electronic Typewriters is an advantage. Duties include providing administrative support such as typing, filing, handling incoming / outgoing mails, maintaining registers and any other clerical related works.

**Age:** 20 to 35 years

Remuneration and Perquisites for above posts are Generous, Commensurate with Qualifications and Experience. Please Apply in writing on or before 15th march 1990 with all relevant details and marking the post applied for on top left corner of the envelope to:

The Advertiser
C/O UTHAYAN - 102

[C-3404]



வெளிவந்துவிட்டது!

✶ அதிசிறந்த ஜோதிட புத்தகம் ✶

ஆயர்பாடி ராசிபலன் 1990 — 91

— 12 ராசிக்கும் தனித்தனிப் பிரதிகள் —

விசேஷமான தினப்பலன்களைக் கொண்டது. உங்களது வாழ்க்கைக்கு நல்வழி காட்டுவது எல்லா பத்திரிகை விற்பனையாளர்களிடமும் பெறலாம். தபாலில் பெற 15 × 1 ரூபா முத்திரை அனுப்புக.

ஆயர்பாடி ஜோதிட நிலையம், தெல்லிப்பழை.P.O

(2705)


## நீங்காத நினைவு முதலாம் ஆண்டு



மலர்வு:
12 - 08 - 1971

உதிர்வு:
14 - 02 - 1989

**திதி:
05-03-1990**

செல்வி
**வத்சலாதேவி சண்முகநாதன்**
[ஆவரங்கால்]

எங்கள் வாடா மலரே! அன்பே அறிவே அழகே!
எமையெல்லாம் தவிக்கவிட்டு எங்கே சென்றாயோ!
கணப்பொழுதும் மறவோம் உன்னை கண்மணியே
நீ கானகம் தான் சென்றதேனோ சொல் உயிரே!!

பிரிவால் வாடும்
அம்மா, அப்பா, மாமாமார், மாமிமார்,
அண்ணா, தம்பி, தங்கை, சித்திமார், அம்மம்மா

நெல்லியோடை,
ஆவரங்கால்.

[2683]

## 45ஆம் நாள் நினைவஞ்சலி



**செல்வி க. சந்திரபிறேமா
(குமுதினி)**

அன்னையின் மடியில்: 29 - 12 - 1966
ஆண்டவன் அடியில்: 20 - 01 - 1990

ஆயிரம் கற்பனைகள் அம்மா யாம் படைத்தோம்
தூயவளே எமைப் பிரிந்து சென்றனையோ?
நேயமுடன் வளர்த்த தாய் சகோதரரை
ஆய குமுதினியே எமைப் பெருந்துயரில் மூழ்கவைத்து
பரீட்சை முடித்துவிட்டு பாதி வழியில் வரும்போது
மண்டைதீவுப் பண்ணையிலே குண்டுபட்டு
இறந்தனையோ அம்மா!
எத்தனை நாளானாலும் யாம் உம்மை மறவோம்
உன் ஆத்மா சாந்தி அடைந்திடுக!

தாய், சோதர சோதரிகள்,
சுவிஸ் சகோதரர்கள் சாந்தன், சுதாகரன்,
ஜேர்மனி அத்தான், அக்கா.

லஷ்மி மஹால்.
மண்டைதீவு. 1

(2717)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாவகச்சேரி பிரதேச சபை,

## கேள்வி அறிவித்தல்

**சாவகச்சேரி பிரதேச சபையின் கச்சாய்/கைதடி உப - பணிமனைகளின் கொடிகாமம்/கைதடி சந்தையில் உள்ள கடைகளில் வியாபாரம் செய்யும் உரிமை**

01. சாவகச்சேரி பிரதேச சபை, நிருவாக எல்லைக்குள் உள்ளதும் இதன் கீழ் விபரப்படியான கடைகளில் வியாபாரம் செய்யும் உரிமைக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் இலங்கைப் பிரஜைகளிடமிருந்து 28-03-90ம் திகதி பிற்பகல் 4.15 மணி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.
02. கேள்விகள் 30-03-90ம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு திறக்கப்படும்.
03. கேள்விப்பத்திரங்கள் 23-03-90ம் திகதி பிற்பகல் 12.30 மணிவரை கேள்விப் பத்திரக்கட்டணமாக ரூபா 100/-ம், மீளளிப்புச் செய்யப்படும் கேள்விப் பாதுகாப்பு வைப்புப் பணமாக ரூபா 1000/-ம் செலுத்தியதன் பேரில் தலைமைப் பணிமனையில் வைத்து வழங்கப்படும். கேள்விப் பத்திரம் பெற விரும்புவோர் தமது அடையாள அட்டைகளையும் உடன் எடுத்து வருதல் வேண்டும்.
04. பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரத்தின் மூலப்பிரதியை குறிக்கப்பட்ட தினத்தன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ கிடைக்கக்கூடியதாக 'விசேட ஆணையாளர், சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம். என்ற முகவரிக்கும் அதன் இணைப் பிரதியை 'உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கும், கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் எந்தக் கடைகளுக்கான கேள்வி எனக் குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது இச்சபையின் காரியாலயத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் போடப்படுதல் வேண்டும்.
05. தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர்கள் (கொடிகாமம்) சபையினால் அங்கீகரிக்கப்படும் முறையிலான கதவுகளைத் தங்களது செலவில் தயாரித்துப் பொருத்துதல் வேண்டும்.
06. கடைகளைத் தெரிவு செய்யும் முன்னுரிமை கூடிய கேள்வியின் அடிப்படையில் வழங்கப்படும்.
07. தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் அவரது கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டது பற்றி அறிவிக்கப்பட்ட கடிதம் கிடைத்த ஏழு நாட்களுக்குள் முழுப்பணத்தையும் செலுத்தி கடையைப் பொறுப்பேற்காதவிடின் அவரது கேள்வி இரத்துச் செய்யப்படுவதுடன் கேள்விப் பாதுகாப்பு வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது. கடையைப் பொறுப்பேற்ற திகதியிலிருந்து சபையால் விதிக்கப்படும் மாத வாடகையை செலுத்த வேண்டும்.
08. ஒவ்வொரு கடையின் ஆகக் குறைந்த கேள்வித் தொகை
    1. கொடிகாமம் சந்தைக் கடைகள் ரூபா 75000/-
    2. கொடிகாமம் சந்தையிலுள்ள கருவாட்டுக் கடைகள் 02—ரூபா 40000/-
    3. கைதடிச் சந்தையிலுள்ள கடைகள் 02— ரூபா 40000/-
09. கேள்விகளை ஏற்றுக் கொள்ளவோ, நிராகரிக்கவோ சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.
10. இதுசம்பந்தமான மேலதிக விபரங்களை சாவகச்சேரி பிரதேச சபைப் பணிமனையில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.
11. 30 - 03 - 1990 ஆம் திகதி கேள்விகள் திறக்கப்படும் போது கேள்விச் சபைமுன் கேள்விக்காரர்கள், அல்லது அவரின் பிரதிநிதி ஒருவர் சமுகம் கொடுக்க அனுமதிக்கப்படுவர்.

**பு. சுந்தரம்பிள்ளை**
விஷேட ஆணையாளர்

சாவகச்சேரி பிரதேச சபை,
கொடிகாமம். 02 - 03 - 90

[சி-3426]



## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில்:
06 - 09 - 1935

★●★●★

ஆண்டவன் மடியில்:
03 - 02 - 1990

திதி: 5. 3. 1990

### சின்னத்தம்பி ஆறுமுகம்

ஆலமரமென நீயிருந்தாய் அதனாற்
காலமெலாம் எமைக் காத்திருப்பாய் என்றிருக்க
காலனவன் பாசக் கயிற்றினாலே
பாலைவனமானதே எம் வாழ்வு!

உமது பிரிவால் துயருறும்:
**மனைவி, மக்கள், மருமகன்.**

காளி கோவிலடி,
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

(2726)


யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தின்

# நடமாடும் சுகாதார சேவை

# இன்று கோப்பாயில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச்.5 யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தின் நடமாடும் சுகாதாரச் சேவை இன்று திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

பின் தங்கிய பகுதி மக்களுக்கு சுகாதாரசேவையை வழங்கும் நோக்குடன் இந்தச் சேவை ஆரம்பிக்கப்படுகிறது.

இன்று காலை 9 மணிக்கு கோப்பாயில் இச்சேவை ஆரம்பமாகிறது.

நாளை மானிப்பாயிலும் புதன்கிழமை யாழ்ப்பாணத்திலும், வியாழக்கிழமை பருத்தித்துறையிலும், வெள்ளிக்கிழமை ஊர்காவற்றுறையிலும் இச்சேவை ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. [இ-3]

இன்னும் மூன்று வாரங்களில்

# யாழ் நகரப் பகுதி மக்களுக்கு தாராளமாக தண்ணீர் கிடைக்கும்

யாழ்ப்பாணம், மார்ச் 5 யாழ்நகர்ப் பகுதியில் உள்ள தண்ணீர்க் குழாய்களில் இன்னும் சுமார் மூன்று வாரங்களில் தாராளமாகத் தண்ணீர் கிடைக்கும் — இப்படிக் கூறினார் யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. வி. பி. பாலசிங்கம்.

யாழ் மாநகரசபை எல்லைக்குள் அரியாலையில் இருந்து நாவாந்துறை — அதாவது யாழ்நகரம் உட்பட இந்தப் பகுதிகளில் சுமார் நாலூறு தண்ணீர்க்குழாய்கள் (பைப்புகள்) பொருத்தப்பட்டுள்ளன.

எனினும் இப்பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு தாராளமாகத் தண்ணீர் கிடைப்பதில்லை எனப் புகார் கூறப்பட்டுவந்தது.

இதுதொடர்பாக ஆணையாளர் விளக்கம் தருகையில் கூறியதாவது:-

அரியாலையில் இருந்து நாவாந்துறைவரை தற்சமயம் தண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்படுகிறது, அரியாலைப் பகுதியினருக்குத் தாராளமாகத் தண்ணீர் கிடைக்கும் அதேநேரம் அமுக்கக் குறைவு காரணமாக நாவாந்துறைப் பகுதிக்குத் தாராளமாகக் கிடைப்பதில்லை.

தற்சமயம் வகுக்கப்பட்டுள்ள திட்டத்தில் இருவலயமாகப் பிரிக்கும் வேலைகள் நடைபெறுகின்றன.

மூன்று வாரத்தில் இவ்வேலைகள் பூர்த்தியாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

அதன்பின் வெவ்வேறு நேரங்களில் இருவலயங்களுக்கும் தண்ணீர் விநியோகிக்கப்படும். அதனால் சகலரும் தாராளமாகத் தண்ணீரைப் பெறலாம்.

அத்துடன் மேலும் 600 குடும்பங்களுக்குப்புதியகுழாய்களும் வழங்கப்பட உள்ளன.

இப்படி அவர் கூறினார். (இ-3)

## இரு வாரங்களில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
டன் மோதலில் ஈடுபட்டனர். ஸ்ரீலங்கா இராணுவமும் ஐந்து தமிழ்க் குழுக்களும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் ஈடுபட்டன. இதனால் பயங்கரமான சூழ்நிலை நிலவியது.

இன்று இந்தியப்படையின் பெரும்பகுதி வெளியேறிவிட்டன. எஞ்சியவை இருவாரத்திற்குள் முற்றாக வெளியேறிவிடும். அதனுடன் இணைந்த குழுக்களும் தமிழ் தேசிய இராணுவமும் இந்தியா சென்றுகொண்டிருக்கின்றன.

அவர்களில் பெரும்பாலானோர் எம்மிடம் சரண் புகுந்துள்ளனர். அவர்களை மன்னித்து விடுதலை செய்து வருகிறோம்.

இரு வாரத்திற்குள் இந்தியடை முற்றாக வாபஸ்பெற்றபின் மாகாணசபை முற்றாக செயலிழந்து விடும். சபை நிர்வாகிகள் திருமலையிலிருந்து கொழும்புற்குச் சென்றுவிட்டனர். இருவாரத்தில் புதிய திருப்புமுனை ஏற்படும்.

ஸ்ரீலங்கா அரசுடனான பேச்சுக்களின் மூலம் இரு விடயங்களை நாம் சாதிக்க முடிந்தது.

முதலாவது — விடுதலைப் புலிகள் — ஸ்ரீலங்கா படையினர் யுத்த நிறுத்தம். இது வெற்றியளித்துள்ளது. தொடர்ந்தும் யுத்த நிறுத்தம் பேணப்படும் என்று நம்பிக்கை எமக்கிருக்கிறது.

இரண்டாவது — இந்தியப் படையை இங்கிருந்து வெளியேற்ற முடிந்தது.

இந்த சாதனைகளுக்குக் காரணம் எமது அரசியல் இராஜதந்திர நடவடிக்கைகள் மட்டுமல்ல; எமது போராளிகளினது இராணுவ சக்தியும் பலமும் கூட காரணமாகும்.

இந்தியாவின் புதிய அரசுடன் பேச நாம் தயாராகவே உள்ளோம்.

அன்று ராஜீவ் விட்ட தவறுகள் குறித்து புதிய இந்திய அரசு கவலை கொண்டுள்ளது. புதிய அரசு எம்முடன் பேசவிரும்புகின்றது கலைஞர் கருணாநிதி மூலம் கருத்துக் கேட்டுள்ளது.

ராஜீவின் வெளிநாட்டுக் கொள்கையை நாம் எதிர்க்கிறோம். ஆனால் இந்திய மக்களுக்கு நாம் எதிரானவர்கள் அல்ல.

இந்திய மக்கள் எமது போராட்டத்துக்கு ஆதரவு தர வேண்டும் என கலைஞரிடம் கேட்டுள்ளோம்.

தமிழ் நாட்டுடன் உறவைப் பலப்படுத்தி இந்திய அரசுடன் நாம் பேசுவோம்.- என்றார். (உ-21)

## அமைதி, சமாதானம்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
சியல் போராட்டத்தில் பல கட்சிகள் செயற்பட்டன பல தலைவர்கள் வந்து போனார்கள். ஏதோ ஒரு வகையில் அந்த தலைமைத்துவங்கள் பிழையான செயல் திட்டங்களில் செயற்பட்டன. ஒரு சரியான தலைமைத்துவம் இருக்கவில்லை.

இதனால் இந்தத் தலைமைத்துவங்கள் நெருக்கடிகளை எதிர்நோக்க முடியாத சந்தர்ப்பத்தில் அரங்கிலிருந்து வெளியேற்றப்பட்டன.

1972இல் ஸ்ரீலங்கா அரசு இன ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டது.

ஆரம்பத்தில் இரகசியமான நடவடிக்கைகளில் ஈடுபட்ட விடுதலைப் புலிகள் 18 வருடங்களின் பின்னர் இன்று மக்கள் சக்தியுடன் ஜனநாயக அமைப்பாக மாறிவிட்டது.

இன்று ஜனநாயக அரசியலுக்கு வந்தாலும் எமது விடுதலைப் பலத்தை உறுதி செய்பவர்களாகவே உள்ளோம்.

இந்நிலையில் எமது எதிர்கால அரசியல் முயற்சிகளுக்கு ஆதரவு கோருகிறோம். இம்மண்ணில் அமைதி, சமாதானம் நிலவ — எமது பலம் மேலும் பெருக — தமிழ், முஸ்லிம் மக்களின் ஆதரவு எமக்குத் தேவை — என்றார்.

டாக்டர் அன்ரன் பாலசிங்கம், திரு. யோகரட்ணம் யோகி, கவிஞர் காசி ஆனந்தன், முன்னணியின் பிரதிச் செயலாளர் செல்வி சுந்தரி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் திரு. செங்கதிர், மௌலவி முகமட் (மூதூர்). கே. மதுரநாயகம் (வளுவாஞ்சிக்குடி), ஜனாப் சேரு அலி ஆகியோரும் உரையாற்றினர். (உ-ஒ-21)

## வடக்கு கிழக்கு..

விட்டதா என்பது பற்றிய ஆளுநரின் அறிக்கையைப் பெறாமலே மாகாணசபை கலைப்புப் பிரகடனத்தை ஜனாதிபதி வெளியிட முடியும் என்றும் சட்ட நிபுணர்கள் விளக்கியுள்ளனர்.

தமிழீழப் பிரகடனம் பற்றிய தீர்மானத்தின் முழு வாசகமும் அரசுக்குக் கிடைத்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ)

## சுதந்திர.....

எப். நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கே. யோகசங்கரி கொழும்பு ஆங்கில பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு கூறியுள்ளார்.

திரு. யோகசங்கரி அந்தப் பேட்டியில் தெரிவித்துள்ளதாவது -

ஆயுத மோதலுக்கு ஈ. பி. ஆர். எல். எப். ஒருநாளும் போகாது. பிரச்சினைகளுக்கு அமைதியான அரசியல் தீர்வு காணவேண்டும் என்பதுதான் எமது நோக்கம்.

தமிழீழ பிரகடனத்தால் அமைதிப்படை விலகல் தாமதமாகாது. இம் மாத முடிவிற்குள் அமைதிப்படை முற்றாக வெளியேறிவிடும் — என்றார்.

இதேவேளை— திருகோணமலையில் இருந்து இயக்க உறுப்பினர்களின் ஆதரவாளர்களும் அவர்களின் குடும்பங்களும் அச்சம் காரணமாக இந்தியாவுக்குச் செல்வதை திரு. யோகசங்கரி உறுதிப்படுத்தினார்என்று 'ஐலண்ட்' செய்தி கூறுகிறது.

அகதிகள் அந்தஸ்து பெற விண்ணப்பபாரங்களை நிரப்பியவர்கள் கப்பல் மூலம் இந்தியா கொண்டு போகப்படுகின்றனர் என்பதை ஈ. பி. ஆர். எல். எப். வட்டாரங்கள் உறுதிப்படுத்தின (ஒ-எ)

## மாகாணசபை---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
என்றும் -

சபையில் கடமையாற்றும் அதிகாரிகள் பலர் லீவைப் போட்டுவிட்டு தமது சொந்த இடங்களான யாழ்ப்பாணத்திற்கும் பிற ஊர்களுக்கும் சென்றிருப்பதாகவும் திருமலையிலிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.


## VACANCIES

Vacancies for ENGINEERS, FOREMAN TECHNICIANS in Electrical Electronic Machanical Telephone, Building & Plumbing exist in IRAQ.

Please contact for particulars:
Eng. CANAGARAJAH,
Mcleod Hospital, Inuvil.

after 4.00 p.m. 7th, 8th & 9th March 90.

(2725)


## கூட்டு செயற் திட்ட அமைப்பு கலைக்கப்படுகிறது

கொழும்பு, மார்ச். 5 தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்காக கொழும்பில் இயங்கி வந்த 'கூட்டு செயல் திட்ட அமைப்பு' என்ற பிரிவு வருகிற வியாழக்கிழமையுடன் கலைக்கப்படவுள்ளது.

இந்த அமைப்பைக் கலைக்கும் வைபவம் வியாழன் பண்டாரநாயக்கா சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. (இ-எ)

## நெல்லியடி வங்கி கிளையில் "சீ பாங்" திட்டம் அறிமுகம்

கரவெட்டி மார்ச் 5 இலங்கை வங்கியின் 150 ஆம் ஆண்டு நிறைவையொட்டி அறிமுகம் செய்யப்பட்ட "சீ பாங் விசாகாட்" முறை நெல்லியடி இலங்கை வங்கி கிளையிலும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

நெல்லியடி இலங்கை வங்கிக்கிளை முகாமையாளர் திரு சி. நடராஜலிங்கம் கடந்த சனிக்கிழமை இதனை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

நெல்லியடி திஸ்ஸாஸ்ரேசில், நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அதிபர் திரு றோய் காற்தராஜாவும் சிற்றாம்பலம் ஸ்ரோசில்மில் அதிபர் திரு.சீ. மகாதேவனும் இத்திட்டத்தின் கீழ் பொருட்களை வாங்கி இதனை ஆரம்பித்து வைத்னர். (இ-70)

### கச்சதீவுக்கும் யாத்திரிகர் செல்வர்?

குருநகர் மார்ச் — 5 கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்திருநாளுக்கும் யாத்திரிகர் போகக்கூடும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

இம்மாதம் 11—ஆம் திகதி நடைபெறவேண்டிய திருநாள் யாழ் - ஆயர் கலாநிதி வ.தியோகுப்பிள்ளை ஆண்டகையால் ரத்துச்செய்யப்பட்டிருந்தது தெரிந்ததே! (ஒ — 51)

சாவகச்சேரி வைத்தியசாலை:

## வைத்திய அதிகாரியை நியமிக்கக் கோரிக்கை

சாவகச்சேரி வைத்தியசாலைக்கு வைத்திய அதிகாரி ஒருவரை தந்துதவுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த வைத்தியசாலைக்கு விஜயம் செய்த பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி என்.சனக சபையிடம் சாவகச்சேரிஉதவி அரசாங்கஅதிபர்திரு.சுந்தரம்பிள்ளை கோரிக்கையைவிடுத்துள்ளார்.

இங்கு ஒரு உதவிவைத்திய அதிகாரியே இருப்பதாகவும் நிரந்தரமாக வைத்திய அதிகாரிஒருவரை நியமிக்குமாறும் கோரப்பட்டுள்ளது (இ-3)


## நடேஸ்வரக் கல்லூரி

காங்கேசன்துறை

### இல்ல மெய்வல்லுநர் போட்டி-1990

### அழைப்பிதழ்

காலம் : 1990-03-06 செவ்வாய்க்கிழமை
நாளை காலை 8-30 மணிக்கு

இடம் : கல்லூரி விளையாட்டு மைதானம்

தலைவர்: திரு. க. இராசதுரை
(வித்தியாலய அதிபரும், காங்கேசன்துறை கல்விக் கொத்தணி அதிபரும்)

பிரதம விருந்தினர்:
திரு. எம். சிவராஜரத்தினம் (முன்னாள் அதிபர்)
கல்வி அதிகாரி (பண்டத்தரிப்புக் கோட்டம்)

பெற்றார், பழைய மாணவர், நலன்விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்

(C/3430)



ஓம் ஸ்ரீவல்லிபுரரேசாய நம;

## உபநயன அழைப்பு

திகதி :- 8 - 3 - 1990 வியாழக்கிழமை
நேரம்:- காலை 10 மணிமுதல் 11 மணி - 30 நிமி-க்குள்

ஸ்ரீ வல்லிபுராலய பிரதமகுரு
சிவஸ்ரீ ச. க. இராமச்சந்திரக் குருவின் மகன்

### செல்வன் சாரங்கன் சர்மா

அவர்களுக்கு

எமது இல்லத்தில் வைத்து சௌள, யக்ஞோபவீத தாரண, பிரம்ம உபதேச வைபவம் நடைபெற உள்ளது. பந்துக்கள் மித்திரர்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆசிர்வதித்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
ச. க. இ. சந்திரக்குரு
குடும்பத்தினர்

ஸ்ரீ கதிரமலை சிவன் கோவிலடி,
புகையிரத நிலைய வீதி,
சுன்னாகம்.

(11933)



## VACANCIES

Vacancies for CARPENTERS, MASONS, BARBENDERS, ELECTRICIANS, PLUMBERS, CIVIL MECHANICAL ENGINEERS and ACCOUNTANT exist at Marshal Inland.

Please contact for particulars;
Eng. CANAGARAJAH,
Mcleod Hospital, Inuvil

after 4.00 p.m. 7th, 8th & 9th March 90

(2724)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உதயன்

05 - 03 - 1990 திங்கட்கிழமை




# தமிழர் - முஸ்லிம்கள் பிரிந்துபோக முடியாது

## இரு சாராருக்குமே அது பாதகம்;

### மட்டுநகர் கூட்டத்தில் யோகி விளக்கம்

மட்டக்களப்பு, மார்ச் 5

**தமிழர்கள், முஸ்லிம்கள் பிரிந்துபோக முடியாதவர்கள் அவர்கள் பிரிந்துபோனால் அது இருசாராருக்குமே பாதகமாக அமைந்துவிடும்.**

**— இப்படிக் கூறினார் விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் திரு. யோகரட்ணம் யோகி நேற்று மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இப்படிச் சொன்னார்.**

நேற்றுமாலை 4 மணிக்கு ஆரம்பமான பொதுக் கூட்டம் நேற்றிரவு 7 மணியளவில் முடிவுற்றது.

திரு. யோகி தமதுரையில் மேலும் கூறியதாவது:-

மாகாணசபைத் தேர்தலில் நாம் நிற்கமாட்டோம் என்று நாம் அன்று கூறவில்லை. மாகாணசபை எமது பிரச்சினைக்குத் தீர்வாகாது; அதிகாரம் போதாது என்றுதான் கூறினோம்.

மாகாணசபைத் தேர்தல் பற்றிய அறிவிப்பு வெளியான போதுகூட ''போர் நிறுத்தத்தை அமுல் செய்யுங்கள். பேச்சுக்கு எங்களை அழையுங்கள்' என்றுதான்கேட்டோம்.

ஆனால் 'இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை நிபந்தனை இன்றி ஏற்றுக்கொள்ளுங்கள். ஆயுதங்களை ஒப்படையுங்கள்! என்று வற்புறுத்தியதன் மூலம் இந்தியா, தேர்தலில் நாங்கள் போட்டியிடுவதற்கு தடைவிதித்தது.

அதிகாரம் இல்லாத மாகாணசபை ஒரு இடைக்காலத் தீர்வாகவே நாம் ஏற்றுக்கொண்டுள்ளோம். மக்களுடன் கலந்தாலோசித்து நிரந்தரதீர்வு எது என்று முடிவு செய்வோம்.

முஸ்லிம் மக்களுக்குப் பல பிரச்சினைகள் இருக்கின்றன. அவை பெரிய பிரச்சினைகள் அல்ல.

முஸ்லிம்களிடையேபலகட்சிகள், பல குழுக்கள் இருக்கின்றன,

எங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வரும் அமைச்சர் ஜனாப், ஏ. ஸி. ஹமீத்திடம் முஸ்லிம்களின் பிரச்சினைகள் பற்றியும் கலந்துரையாடினோம்.

முஸ்லிம்கள் தங்களுடைய பிரச்சினைக்கு தீர்வு எதுஎன்று கருதுகிறார்களோ அதனை நாம் அங்கீகரிப்போம் என்று ஜனாப் ஹமீத்திடம் கூறியுள்ளோம்.

முஸ்லிம்களின் மத, கலாசார, பாரம் பரியம் பேணப்பட வேண்டும் என அவர்கள் கேட்கிறார்கள். அதனை நாம் ஏற்றுள்ளோம்.

ஆனால் எமக்கு சொந்த மண் இல்லாமல் நாம் எப்படி இவற்றைப் பாதுகாக்க முடியும்.

முஸ்லிம்கள் தமிழ் மக்களிடமிருந்து பிரிந்துபோக முடியாதவர்கள், சிறிய பிரச்சினைகளான – ''விவசாயம் செய்ய முடியவில்லை, வர்த்தகம் செய்ய முடியவில்லை, நிவாரணத்தில் புறக்கணிப்பு'' போன்ற சின்னச் சின்ன காரணங்களைக் காட்டி சிலர் பிரிந்து போகத் தூண்டுகிறார்கள்.

ஆனால் தமிழ் – முஸ்லிம் மக்கள் பிரிந்து போனால் அது இருவருக்குமே பாதகமாகவே அமையும் – என்றார்.

## புளொட் குழுவுடன் ஹமீத் ஒன்றரை மணிநேரம் பேச்சு

கொழும்பு, மார்ச் 5

புளொட் அமைப்பின் அரசியல் கட்சியான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணித் தூதுக்குழு நேற்று முன்தினம் கொழும்பில் அமைச்சர் ஜனாப் சாகுல் ஹமீதுவுடன் பேச்சுக்கள் நடத்தியது.

ஒன்றரை மணித்தியாலங்கள் வரை பேச்சுக்கள் நீடித்தன.

வடக்கு - கிழக்கு மாகாண சமாதானக் கமிட்டியை கூட்டுவது பற்றி இப்பேச்சுக்களின் போது ஆராயப்பட்டது.

ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணித் தூதுக் குழுவுக்கு அதன் தலைவர் திரு. த. சித்தார்த்தன் தலைமை வகித்தார்.

கரவை கந்தசாமி, திரு. எஸ். சதானந்தன், திரு. எஸ். சண்முகநாதன் ஆகியோரும் குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தின் தற்போதைய நிலைமை, அதிகாரப்பரவலாக்கல், கல்வி வளர்ச்சியில் தமிழர் புறக்கணிப்பு தொழில் வாய்ப்பில் பாரபட்சம், மலையகத் தமிழரின் இன்னல்கள் ஆகியன பற்றி தூதுக்குழு அமைச்சரிடம் எடுத்துரைத்தது, (ஒ-எ)

## பத்திரிகையாளர்களுக்கு மக்கள் வங்கி கடனுதவி

கொழும்பு, மார்ச் 5

உழைக்கும் பத்திரிகையாளர்களுக்கு என்று விசேஷடன் திட்டம் ஒன்றை மக்கள்வங்கி ஆரம்பித்துள்ளது.

கமராக்கள், டைப்ரைட்டர்கள், ஒலிப்பதிவு கருவிகள், மற்றும் மோட்டார் சைக்கிள் வாங்கவிரும்பும் பத்திரிகையாளர்கள் இவ்விசேஷ கடனுதவித் திட்டத்தின்கீழ் கடன்பெறலாம்.

பெறும்கடனைஐந்துஆண்டு காலத்துக்குள் திருப்பிச்செலுத்த வசதி செய்யப்பட்டுள்ளது.

விசேஷ கடனுதவித் திட்டத்தின்கீழ் 20 ஆயிரம் ரூபா வரை பத்திரிகையாளர்கள் கடன்பெற வழிசெய்யவேண்டும் என்று உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் விடுத்த வேண்டுகோளின்மீதே இத்திட்டத்தை மக்கள் வங்கி ஆரம்பித்துள்ளது.

புகைப்பட மற்றும் கலைக் கண்காட்சிகள் நடத்தவும் புத்தகங்களை வெளியிடுவதற்கான செலவைச் சமாளிக்கவும் பத்திரிகையாளர்கள் இத்திட்டத்தின்கீழ் கடன் பெறலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது, (இ-எ)

### காணிச் சீர்திருத்தம்

## ஜனாதிபதி தலைமையில் மாநாடு

யாழ்ப்பாணம் மார்ச் 5

காணிச்சீர் திருத்தஆணைக் குழுவின் சிபார்சுகள் தொடர்பான விசேட மாநாடு நாளை செவ்வாய்க் கிழமை காலை 9 மணிக்கு கொழும்பு ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற இருக்கிறது.

நாட்டில் உள்ள அரசாங்க அதிபர்கள் அழைக்கப்பட்டுள்ள இம் மாநாட்டுக்கு ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தலைமை வகிப்பார். (இ.3)

**மெலித்தா கிறீஸ்தவ சென்ரர்**

★ பைபிள் புத்தகங்கள் ★ சஞ்சிகை வினாவிடை
★ ஸ்ரிக்கர் படங்கள் ★ கஸெற் பாடல்கள்
★ செய்தி வீடியோ ★ மின்சாரப் பொருட்கள்
★ குளிர் சாதனப் பெட்டி திருத்துதல்

இல. 544, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (2727)

### நடேஸ்வரா விளையாட்டு போட்டி

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியின் இல்லங்களுக்கிடையிலான வருடாந்த மெய்வல்லுநர் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை கல்லூரியின் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

கல்லூரி அதிபரும், காங்கேசன்துறைக் கொத்தணி அதிபருமான திரு. க. இராசதுரை தலைமையில் போட்டி இடம்பெறும்.

இக்கல்லூரியின் முன்னாள் அதிபரும், பண்டத்தரிப்புக் கோட்டக் கல்வி அதிகாரியுமான திரு. எம். சிவராஜரட்ணம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

### தமிழீழப் பிரகடனம்:

## அரசின் நிலைப்பாட்டை ஜனாதிபதி தெரிவிப்பார்

கொழும்பு மார்ச் 5

தமிழீழப் பிரகடனம் செய்யப்பட்ட பின்னர் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் எழுந்துள்ள புதிய நிலைதொடர்பாக அரசின் நிலைப்பாட்டை ஜனாதிபதி பிரேமதாஸா இவ்வாரம் தெரிவிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

வெள்ளிக்கிழமை முதலமைச்சர் திரு. வரதராஜப் பெருமாளுடன் திருகோணமலையில் நடத்திய பேச்சுக்களின் விபரங்களை மாகாண ஆளுநர் நளின் செனவிரத்தினாவும் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் சிறில் ரணதுங்காவும் ஜனாதிபதிபிரேமதாஸாவுக்கு தெரியப்படுத்தினர். (இ- எ)

## நாடு பிளவுபடக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது

### ஈரோஸ் குழு ஹமீதிடம் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 5

நாடு பிளவுபடக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் ஹமீதுவிடம் ஈரோஸ் குழுவினர் தெரிவித்தனர்.

வெள்ளிக்கிழமை இரவு அமைச்சரைச் சந்தித்த ஈரோஸ் குழுவில் திரு. வே. பாலகுமாரன், எம்பிக்களான திரு. எஸ். நவரட்ணராஜா, திரு. எஸ். எட்வேர்ட் ஆகியோர் இருந்தனர்.

இச் சந்திப்பின் போது திரு. பாலகுமாரன் அமைச்சரிடம் தெரிவித்த விஷயங்கள் பின்வருமாறு:

தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய அடிப்படையில் சமரசத்தீர்வு ஒன்றைக் காண வேண்டும் என்பதில் ஜனாதிபதியைத் தவிர வேறு யாரிடமும் மனமாற்றத்தைக் காணக் கூடியதாக இல்லை.

சிறுபான்மையினரின் அடிப்படை உரிமைகளை அங்கீகரிப்பதில் தென் இலங்கைக் கட்சிகளைப் பொறுத்தவரை இணக்கம் எதுவும் ஏற்படவில்லை. நாடு பிளவுபடக்கூடிய இன்றைய நிலைக்குஇதுவே காரணமாகும்.

ஆயுதக் கையளிப்புத்தான் முக்கியம் என்று அமைச்சர்கள் பலர் பேசுகின்றனர்.

அரசாங்கபிரமுகர்களில் சிலரின் நடவடிக்கைகளைப் பார்த்தால் மீண்டும் தமிழர்களை இராணுவ நடவடிக்கை மூலம் அடக்கி ஒடுக்க அரசு முயற்சிக்கிறதா என்ற கேள்வி எழும்புகிறது.

தமிழ்க் குழுக்களிடம் ஆயுதம் இருப்பதற்கு இன அடக்கு முறை இன்னமும் தொடர்வதே காரணமாகும்.

மனமாற்றம் ஏற்பட்டு நீதியான தீர்வு காண பெரும்பான்மையினருக்கு இன்னொரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

இவ் வாய்ப்பை பயன்படுத்தி குறுகிய அரசியல் லாபம் தேட தென்னிலங்கை அரசியல் வாதிகள் முற்பட்டால் நாடு பிளவுபடுவதைத் தடுக்கவே முடியாது — இப்படி ஈரோஸ் குழுவினர் தெரிவித்தனர்.

## தனியார் ஆஸ்பத்திரிகளிலும் விசா கார்ட் திட்டம் அமுல்

யாழ்ப்பாணம், மார்ச் 5

இலங்கை வங்கியின் விசா கார்ட்திட்டம் யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் வைத்தியசாலைகளிலும் அமுல் செய்யப்பட இருக்கிறது.

இலங்கைவங்கியின் யாழ்-பிராந்திய முகாமையாளர் திரு. கணேசமூர்த்தி இத தெவித்தார்.

விசா கார்ட் மூலம் உணவு, கட்டடப் பொருளிகளைக் கொள்வனவு செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

தற்சமயம் தனியார் வைத்தியசாலைகளும், பிரபல ஹோட்டல்களும் இந்த விசா கார்ட் திட்டத்தை நடைமுறைப்படுத்த விண்ணப்பித்துள்ளார்கள்.

அவர்களுக்கு விரைவில் அனுமதியளிக்கப்பட்டபின் விசாகாட் மூலம் பொதுமக்கள் தனியார் வைத்தியசாலைகளிலும், ஹோட்டல்களிலும் தம் வேலைகளை மேற்கொள்ளலாம்.

இத்திட்டம் கிராமப்புறங்களுக்கும விஸ்தரிக்கப்படும்.

—இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

## புத்தர் தடை செய்தவற்றுள் நன்னீர் மீன் வளர்ப்பும் ஒன்று!

### 4 மகாநாயக்கர் கூட்டாக தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 5

நன்னீர் மீன் வளர்ப்புத் திணைக்களத்தை உடனடியாக மூடவேண்டும் என்பதற்கான காரணங்களை நான்கு மகாநாயக்க தேரர்களும் கூட்டாக ஜனாதிபதிக்குத் தெரியப்படுத்தி உள்ளனர்.

புத்த பெருமான் தடை செய்துள்ள ஐந்து தொழில்களில் நன்னீர் மீன்வளர்ப்பும் அடங்குவதாக மகாநாயக்க தேரர்கள் கூறியுள்ளனர்.

விற்பதற்கோ அல்லது உணவுக்கவோ மிருகங்களையும் மற்றும் உயிரினங்களை வளர்ப்பது பௌத்த தர்மத்தின் கீழ் தடைசெய்யபட்டுள்ளது.

எமது முன்னோர்கள் உணவுக்காக மிருகங்களை வளர்க்கவே இல்லை. 133 ஆண்டு கால வெள்ளையர் ஆட்சியில் கூட நன்னீர் மீன் வளர்ப்புக்கு என தனித் திணைக் [illegible] இல்லை.

[illegible] களையும் வன்செயலையும் கட்டுப்படுத்துவதற்காக நன்னீர் மீன்வளர்ப்புத் துறையை மூடிவிடவேண்டும்.

இப்படி மல்வத்தை, அஸ்கிரிய, அமரபுர, ரமாண்ண பீடங்களின் மகாநாயக்க தேரர்கள் மகஜர் மூலம் ஜனாதிபதியைக் கோரியுள்ளனர்.

### செஞ்சிலுவை பிரதிநிதி யாழ் வருகிறார்

யாழ்ப்பாணம், மார்ச் 5

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் இலங்கைப் பிரதிநிதி திரு. நயோக்கி கொக்கன் நாளை மறுதினம் புதன் கிழமை யாழ்ப்பாணம் வருகிறார்.

செஞ்சிலுவைச் சங்கத்தின் பல்வேறு திட்டங்களை அவர் பார்வையிடுவதுடன் எதிர்கால திட்டங்கள் குறித்து பேச்சுக்களையும் நடத்துவார். (இ-3)

## மரண அறிவித்தல்கள்

கோண்டாவில் கிழக்கு

### திருமதி பரிமளம் பொன்னுத்துரை

கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கலட்டி அம்மன் கோவிலடியை வதிவிடமாக கொண்டவருமாகிய காலஞ்சென்ற திரு. சி. சி. பொன்னுத்துரையின் அன்பு மனைவி திருமதி பரிமளம் பொன்னுத்துரை காலமாகிவிட்டார்.

அன்னார் திருமதி இராசநாயகி நடராசா, பரமநாதன் (இளைப்பாறிய உதவி கணக்காய்வாளர் நாயகம்), கந்தசாமி (இளைப்பாறிய தபால் அதிபர்), திருமதி (டாக்டர்) குணநாயகி கந்தசாமி (சுகாதார வைத்திய அதிகாரி, ஊர்காவற்றுறை), திருமதி சுஜிதா நவரத்தினராசா ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற நடராசா (இளைப்பாறிய காரியாலய உதவியாளர்), திருமதி கமலராணி பரமநாதன், திருமதி கமலாசனி கந்தசாமி, திரு. பொ. கந்தசாமி (பிரதிப் பணிப்பாளர், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், திருகோணமலை), மு. நவரத்தினராசா (உதவி மின்சார பொறியியலாளர், இலங்கை மின்சார சபை, மாங்குளம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், திருமதி (டாக்டர்) யசிந்தா சோதிநாதன் (U.K), திருமதி வசந்தா சந்திரகுமார் (நைஜீரியா), திருமதி ஜெயந்தா மயூரநாதன் (U.K), பகீரதன், சுகந்தி, குகாயினி, சதீஸ், கீதன் ஆகியோரின் பேத்தியாரும், பிரியா, றோசான், மீரா, சத்தியன், கவிதா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 58/1, கலட்டி அம்மன் கோவில் வீதி இல்லத்தில் 06-03-1990 செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

58/1, கலட்டியம்மன் கோவில் வீதி,
கலட்டி, யாழ்ப்பாணம். [11957]

### திருமதி தெய்வானைப்பிள்ளை செல்லத்துரை

திருமதி தெய்வானைப்பிள்ளை செல்லத்துரை அவர்கள் 04-03-1990 இல் காலமானார்.

இவர் செல்லத்துரை நகைமாளிகை உரிமையாளர் செல்லத்துரையின் அன்பு மனைவியும், புஸ்பம், காலஞ்சென்ற இராசேந்திரம், செல்வநாயகம் (தெய்வா நகை மாளிகை உரிமையாளர்), தனலெக்சுமி (ஒஸ்ரேலியா), விஜயலெக்சுமி (ஒஸ்ரேலியா), ஜெயலெக்சுமி (லண்டன்), இந்திராணி (ஒஸ்ரேலியா), கணேஸ்வரி (ஒஸ்ரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், துரைராசா (ஓய்வு பெற்ற ஆசிரியர், கந்தரோடை), பேராசிரியர் Dr. அரசரெட்ணம் (ஒஸ்ரேலியா), அமிர்தலிங்கம் (கணக்காளர், ஒஸ்ரேலியா), Dr. ஜீவானந்தம் (லண்டன்)' குணராஜன் (முன்னாள் மக்கள் வங்கி முகாமையாளர் – ஒஸ்ரேலியா), பத்மநாதன் (பொறியியலாளர், ஒஸ்ரேலியா), அருந்தவமலர் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**செ. செல்வநாயகம்**
(தெய்வா நகை மாளிகை)

இல, 7, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம். [11954]

### செல்வி திருநாவுக்கரசு தாட்சாயினி

**(வேம்படி உயர்கல்வி மாணவி)**

உடுவில் மேற்கைச் சேர்ந்த செல்வி திருநாவுக்கரசு தாட்சாயினி அகால மரணமானார்.

இவர் உடுவில் மேற்கு கந்தையா திருநாவுக்கரசு (பாதுகாப்பு உத்தியோகத்தர்) பவளகாந்தி ஆகியோரின் சிரேஷ்ட புதல்வியும், கல்யாணி (உடுவில் மகளிர் கல்லூரி), கார்த்திகாயினி, நிரஞ்சினி (வேம்படி மகளிர் கல்லூரி) ஆகியோரின் சகோதரியும், சிவசுப்பிரமணியம், சிவமணி, சோமசுந்தரம், இந்துமதி ஆகியோரின் பெறாமகளும், மகேசன் செல்வரத்தினத்தின் (அவுஸ்திரேலியா) மருமகளும், சிவபாதன், சிவநாமன் (சுவிஸ்), சிவசக்தி, சிவகலை, கலைமகள், கலைச்செல்வி, திருவேணி ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரியும், மகேந்திரநாதன் (நில அளவையாளர்), உமாநிதி, கேதீசன் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 05-03-1990 திங்கட்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக குடும்ப மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**க. திருநாவுக்கரசு**

உடுவில் மேற்கு,
சுன்னாகம். [11956]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 5- 03 – 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org